விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 27
ஒலி 073 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 18 திங்கட்கிழமை (02.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## மசகு எண்ணெய், எரிவாயு விலைகள் அதிகரிப்பு



07ஆம் பக்கம் பார்க்க

## ஈஸ்டர் தாக்குதல் மைத்திரி - ரணிலுக்கு எதிராக விசாரணை



07ஆம் பக்கம் பார்க்க

## கொள்கலன்களில் எரிபொருள் நிரப்ப வேண்டாம்



விடுக்கப்பட்டது எச்சரிக்கை

05ஆம் பக்கம் பார்க்க

## ஈரானின் இடைக்கால உச்ச தலைவர் நியமனம்



(தெஹ்ரான்)
ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமெனி உயிரிழந்ததைத் தொடர்ந்து, அந்த நாட்டின் புதிய இடைக்கால உச்ச தலைவராக அவரது இளைய மகன் அய துல்லா அலிரேசா அராஃபி நியமிக்கப்பட் டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## தலைவர் காட்டிய பாதை தொடரும்

ஈரான் பகிரங்கம்



(தெஹரான்)
ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனியின் மறைவைத் தொடர்ந்து ஈரான் வெளிவிவகார

02ஆம் பக்கம் பார்க்க

## பிரதம நீதியரசர் வடக்குக்கு விஜயம்





15ஆம் பக்கம் பார்க்க

# இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதல் ஈரான் தலைவர் காமேனி பலி

## போர்க்களமானது மத்திய கிழக்கு





(தெஹரான்)
ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் கூட் டாக நடத்திய ஏவு கணைத் தாக்குதலில் ஈரா னின் உச்ச தலைவர் அயத் துல்லா அலி காமேனி உயிரி ழந்ததை ஈரான் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## கடலில் மாயமான மீனவர் நேற்று சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறைக் கடற் பரப்பில் கடற்றொழிலில்

15ஆம் பக்கம் பார்க்க

## நாடு முழுமையிலும் களை கட்டிய வரிசை




02ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குக! இலங்கையிடம் வோல்கர் வலியுறுத்து



(ஜெனிவா)
பயங்கரவாதத் தடைச் சட் டத்தை முற்றாக நீக்குமாறும் புதிதாக உருவாக்கப்படும் சட் டம் மனித உரிமைகள் நியமங் களுக்கு ஏற்புடையவாறு அமை வதை உறுதிப்படுத்துவதற்கு சிவில்சமூகங்களுடன்இணைந்து பணியாற்றுமாறும் ஐக்கிய நாடு கள் மனித உரிமைகள் உயர்ஸ் தானிகர் வோல்கர் டேர்க் இலங்கை

15ஆம் பக்கம் பார்க்க

## இந்திய இழுவைப் படகுகளுக்கு ஒருபோதும் அனுமதியில்லை

கச்சதீவில் அமைச்சர் சந்திரசேகர்




(கச்சதீவு)
இந்திய மீனவர்களின் இழுவைப் படகு மீன்பிடிக்கு இலங்கைக் கடற்பரப்பில் ஒரு போதும் அனுமதி வழங்கப்

02ஆம் பக்கம் பார்க்க

## அலி காமேனி படுகொலை ரஷ்ய ஜனாதிபதி புடின் கண்டனம்

(மொஸ்கோ)
ஈரானின் உச்ச தலை வர் அயதுல்லா அலி காமேனி இஸ்ரேல் - அமெ ரிக்கப் படைகளால் படு

02ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் பதுக்கலைத் தடுக்க களமிறங்கும் பாதுகாப்புத் தரப்பு

(கொழும்பு)
நாட்டில் தேவையற்ற முறையில் எரிபொருளைப் பதுக்கி வைப்பவர்களைக் கண்டறிவதற்காக பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவி னரை உள்ளடக்கிய விசேட சோதனைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கில் ஏற் பட்ட பதற்றங்களால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சத்தைப் பயன்படுத்தி,

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய...

கொலை செய்யப்பட்டமைக்கு ரஷ்ய ஜனாதிபதி புடின் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில்,

"இது மனித மாண்புகள் மற்றும் சர்வதேச சட்டத்தின் அனைத்து விதிமுறைகளையும் மீறும் வகையில் மிக இழிவாக மேற்கொள்ளப்பட்ட படுகொலை" என விமர்சித்துள்ளார். (ந-7)

## தலைவர்...

அமைச்சு விடுத்துள்ள உத்தியோக பூர்வ அறிக்கையில், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் அண்மைக்காலத் தாக்குதல்களுக்கு மீண்டும் தனது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

ஈரானின் அணுசக்தி திட்டம் தொடர்பாக தெஹ்ரான் மற்றும் வொஷிங்டன் இடையே ஓமான் நாட்டின் மத்தியஸ்தத்துடன் இராஜதந்திர பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த சூழலிலேயே இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

குறிப்பாக, கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி ஜெனிவாவில் இரு நாடுகளுக்கும் இடையிலான அண்மைக்கால பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

இந்த சூழல் குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஈரானிய வெளிவிவகார அமைச்சர் அப்பாஸ் அராக்சி (Abbas Araghchi), "உச்ச தலைவர் அலி கமேனி காட்டிய பாதை எவ்வித தடையுமின்றி தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும்" எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

அணுசக்தி பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நடந்து கொண்டிருந்தாலும், அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கைகள் பிராந்தியத்தில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக ஈரான் குற்றம் சாட்டியுள்ளது.

காமேனியின் மறைவு ஈரானின் உள்நாட்டு அரசியலில் மட்டுமன்றி, சர்வதேச உறவுகளிலும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ந-7)

## இந்திய...

படமாட்டாது எனக் கடற்தொழில் மற்றும் நீர்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

திருவிழாவில் கலந்து கொண்ட இந்திய நாட்டுப்படகு மீனவர் சங்கம் மற்றும் தமிழக கடல்சார் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அமைச்சருக்கு பொன்னாடை போர்த்தி இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என வலியுறுத்தினர்.

அத்துடன் மகஜர் ஒன்றையும் அமைச்சரிடம் கையளித்தனர். இதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சந்திரசேகர், இலங்கை இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்ட போது இரு தரப்பு மீனவர் பிரச்சினை குறித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

மீனவர் பிரச்சினைக்கு கட்டம் கட்டமாகத் தீர்வு காணப்படும். எதிர்வரும் மே மாதத்துக்கு பின்னர் தமிழகத்துக்குச் செல்லவுள்ளேன். இதன் போது இந்தப் பிரச்சினையுடன் தொடர்புடைய சகல தரப்பினருடனும் கலந்துரையாடவுள்ளோம்.

தேவையாயின் இந்திய மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராகவுள்ளோம்.

கைது செய்யப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும். நீதிமன்ற விடயத்தில் எம்மால் தலையிட முடியாது. சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களுக்கு அதிக பட்ச தண்டப்பணம் அறவிடப்படுவதாகக் குறிப்பிடப்படுகிறது.

தண்டப்பணம் குறித்து அமைச்சு மட்டத்தில் கவனம் செலுத்தப்படும். இந்திய மீனவர்களின் இழுவைப் படகுப் பயன்பாட்டால் இலங்கையின் மீன் மற்றும் கடல்வாழ் வளங்களுக்கு பாரிய அச்சுறுத்தல் காணப்படுகிறது.

கடல்வளங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஆகவே இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் இழுவைப் படகைப் பயன்படுத்துவதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது என்றார். (ந-7)

## நாடு முழு...

கொழும்பில் வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் மாளிகாவத்தை ஆகிய பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நேற்றுக் காலை முதல் வாகனங்கள் நீண்ட வரிசைகளில் நிறுத்தப்பட்டிருந்தன.

அத்துடன், குறித்த பகுதிகளில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மக்கள் கொள்கலன்களில் பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசைகளில் காத்திருப்பதையும் காணக்கூடியதாக இருந்தது.

இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கம்பளை, கெலிஓயா, வெலிகல்ல, நுவரெலியா மற்றும் பெரதெனியா ஆகிய இடங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் நீண்ட வரிசையில் எரிபொருளுக்காக மக்கள் காத்திருந்தனர். (ந-7)

## இஸ்ரேலின்...

இந்நிலையில் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதலைத் தொடுத்துள்ளது.

ஈரானின் உச்ச தலைவரான அயத்துல்லா அலி காமேனி பாதுகாப்பாக இருந்த நிலக் கீழ்த்தளத்தின் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக 30 ஏவுகணைகள் மூலம் தாக்குதலை மேற்கொண்டது.

இதில் உச்ச தலைவர் காமேனி, அவரது மகள், மருமகன், பேரப்பிள்ளை ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

ஈரானின் உச்ச தலைவர் உயிரிழந்ததை அடுத்து அவரது இரண்டாவது மகன் அயத்துல்லா அலி ரேசா அராஃபி உச்ச தலைவராக நியமிக்கப்பட்ட நிலையில், மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்கள் மீது ஈரான் தொடர் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இதில் அமெரிக்காவின் 14 இராணுவத் தளங்கள் தாக்கப்பட்டதாக ஈரான் நாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. இதேவேளை நேற்று ஈரான் மீது இஸ்ரேல் மீண்டும் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியதாக சர்வதேச செய்திகள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது நடத்திய தாக்குதலை அடுத்து மத்திய கிழக்கில் மிகப் பயங்கரமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இது ஒருபுறம் இருக்க, ஹோர்முஸ் நீரிணை ஊடாக எந்தவொரு கப்பலுக்கும் பயணிக்க அனுமதி இல்லை என ஈரானிய இஸ்லாமியப் புரட்சிகரப் பாதுகாப்புப் படை அறிவித்துள்ளதால் நிலைமை இன்னும் மோசமாகியுள்ளதாகவும்,

இதனால் உலகில் உள்ள பல நாடுகள் கடும்பாதிப்பை எதிர் நோக்கும் எனவும் சர்வதேச ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (ந-7)

# மரண அறிவித்தல்

பிறப்பு 28 - 07 - 1945



இறப்பு 01 - 03 - 2026

# நடராசா யோகராஜா

**[ஓய்வுபெற்ற மருந்தாளர்]**

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரம் மற்றும் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா யோகராஜா அவர்கள் நேற்று (01.03.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா (திருச்செல்வம்) - மங்கையற்கரசு தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி - இராசம்மா தம்பதியினரின் மருமகனும் காலஞ்சென்ற ஜெயபத்மினி (பேபி) அவர்களின் பாசமிகு கணவரும் ஜெயப்பிரியா (ஆசிரியை - யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), ஜெயபானு (ஆசிரியை - பன்னாலை சேர் கனகசபை அ.த.க பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மநேசன் (ஆசிரியர் - யா/ அருணோதயாக் கல்லூரி), சுரேந்திரநாத் (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான சந்திரகாந்தி, சந்திரகுமாரி மற்றும் ஸ்ரீபாலன், சந்திரவதனா, மதிவதனா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரண்ஜன், அக்சயன், சக்திதரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

முத்தட்டுமட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(6959)

தகவல்: குடும்பத்தினர்
077 244 8109
077 469 8557

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 06.04.1945
இறப்பு 01.03.2026

எமது கல்லூரியின் ஆசிரியை)
திருமதி.ரஜி சுரேந்திரன் அவர்களின்
அன்புத் தாயார்

அமரர் **பேரின்பநாயகம் புவனேஸ்வரி**

அவர்கள் 01.03.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ்ப்பாணம் இந்து
மகளிர் கல்லூரி.

(C-5093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுலா மேம்பாட்டுக்கு 130 மில்லியன் ஒதுக்கீடு

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் சுற்றுலா மற்றும் வெளிநாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக 130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் பல வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தொன்மையான இடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு உள்ளூர் வேலைவாய்ப்பு அதிகரிக்கப்படவுள்ளதாகவும், பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி கிழக்கு மணல்காடு கிராமத்திற்கு சென்று அங்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் மற்றும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கிறிஸ்தவ தேவாலயம் ஆகியவற்றை பார்வையிட்டபின் அங்கு கிராம மட்ட அமைப்புக்களோடு உரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (8-60)

## கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர் வே.கரிகாலனின் ஒழுங்குபடுத்தலில் Tamil Ad மற்றும் BBK Partnership இன் நிதிப் பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு மந்துவில் மற்றும் உடையார்கட்டு பகுதிகளில் கடந்த 28 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு, மந்துவில், வேணாவில், மூங்கிலாறு, உடையார்கட்டு, இளங்கோபுரம், மாணிக்கபுரம் மற்றும் வள்ளுவர்புரம் ஆகிய பகுதிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 60 பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (8-299)

### பயங்கரவாத தடைச்சட்டம் தேவையில்லை:

# கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டில் உறுதியாக நிற்க வேண்டும்

அம்பிகா சற்குணநாதன்

**(கொழும்பு) …… பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோருபவர்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை என்ற கொள்கை அடிப்படையிலான நிலைப்பாட்டை எடுக்கவேண்டும். மாறாக எமக்குப் பொருந்தும்போது அதனைப் பயன்படுத்திவிட்டு, எமக்குப் பொருந்தாத வேளையில் மாத்திரம் "மீறல்" எனக் குரலெழுப்பக்கூடாது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் முன்னாள் ஆணையாளரும் மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்களைத் திட்டமிட்டமை மற்றும் அதற்கு உதவி, ஒத்தாசை புரிந்தமை தொடர்பிலான குற்றச்சாட்டின்கீழ் முன்னாள் உளவுத்துறைப் பிரதானி ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டிருப்பதுடன், அவரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் 90 நாட்கள் தடுப்புக்காவலில் வைத்து விசாரணை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இடம்பெற்றிருக்கும் இந்தக் கைது குறித்து தனது உத்தியோகபூர்வ "எக்ஸ்" தளப் பக்கத்தில் பதிவொன்றை அம்பிகா சற்குணநாதன் பதிவிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறியிருப்பதாவது:

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோருபவர்கள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் சுரேஷ் சலே கைது செய்யப்பட்டமையை மாத்திரம் புறந்தள்ள முடியாது. சுரேஷ் சலேவை ஏனைய சட்டங்களின் கீழ் கைதுசெய்து, விசாரணை மேற்கொள்ள வேண்டியிருப்பின் 15 நாட்கள் தடுத்து வைப்பதற்கான உத்தரவைப் பெற்றிருக்கமுடியும். அவசியமேற்படின் அந்த உத்தரவை 15 நாட்களின் பின்னர் மீண்டும் நீடித்திருக்கமுடியும்.

அதேவேளை அவருக்கு எதிராகப் போதிய ஆதாரங்கள் இருப்பின், குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டும். மாறாக உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல் இடம்பெற்ற தினம் நெருங்குவதனாலும், அதற்குள் ஏதேனுமொரு பெறுபேறைக் காண்பிக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருப்பதனாலும் போதிய ஆதாரங்களைத் திரட்டுவதற்கு முன்பதாகவே சுரேஷ் சலே கைது செய்யப்பட்டிருப்பின், இக்கைது அவசியமற்றது.

நாம் கொள்கை அடிப்படையிலான நிலைப்பாடுகளை



(பயங்கரவாதத் தடைச்சட்டம் தேவையில்லை) எடுக்க வேண்டும். அதாவது குறித்தவொரு நபர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவராகவோ அல்லது நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஒரு பங்காளியாகவோ இருந்தாலும், நாம் அந்தக் கொள்கையின் பக்கம் உறுதியாக நிற்கவேண்டும். மாறாக எமக்குப் பொருந்தும்போது அதனைப் பயன்படுத்திவிட்டு, எமக்குப் பொருந்தாத வேளையில் மாத்திரம் "மீறல்" எனக் குரலெழுப்பக் கூடாது என அவர் அப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். (8)

## 'ஞானச்சுடர்' மலர் வெளியீடு

(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்தம் வெளியீடு செய்யப்படும் ஞானச்சுடர் 338 ஆவது ஆன்மீக மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரமத்தில் அதன் முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் இடம்பெற்றது.


நிகழ்வில் 2025 ஆம் வருட ஞானச்சுடர் மலருக்கான வாசகர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றி வெற்றியடைந்தவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (8-60)

## புதிய சுற்றுச்சூழல்; தெளிவூட்டல்

(தருமபுரம்)

புதிய சுற்றுச்சூழல் சட்டம் தொடர்பாக தெளிவூட்டும் கலந்துரையாடல் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அமைச்சின் மேலதிக செயலாளர் வைத்தியர் ரவீந்திர காரியவசம் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க திபர் நளாயினி இன்பராஜ், மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், சுற்றுச்சூழல் அதிகாரசபை உத்தியோகத்தர்கள் ,வனவளத்திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், சுற்றுச்சூழல் தொடர்பான திணைக்கள உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர். (8-316)



தமிழ்த்தேசியக் கலை இலக்கியப் பேரவை தாய்வீடு இதழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகத்தின் ஏற்பாட்டில் பொன்னையா விவேகானந்தனின் 4 நூல்கள் அறிமுக நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

# ஈரானிலுள்ள இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழலினால் அங்கு வசிக்கும் மற்றும் பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் முக்கிய கடமையாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கின் பல்வேறு பகுதிகளில் நிலவும் போர் பதற்றங்களுக்கு மத்தியில் சிக்கியுள்ள இலங்கையர்களின் உயிர் பாதுகாப்பினை உறுதி செய்ய வேண்டியது பாரிய பொறுப்பாகும் எனத் தெரிவித்த அவர்,

**அங்குள்ள தூதரகங்கள்** ஊடாகத் தேவையான அனைத்து இராஜதந்திர நகர்வுகளையும், அவசர காலங்களில் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்துவதற்கான போக்குவரத்து மற்றும் தளபாட வசதிகளையும் அரசாங்கம் இப்போதே தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

அத்துடன் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இலங்கையர்களுக்குத் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் வழங்குவதற்கு வெளிவிவகார அமைச்சு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவை ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்.

**இக்கட்டான இந்தச் சூழலில்**



ஒரு விநாடியைக் கூட வீணடிக்காமல், வெளிநாடுகளில் உள்ள நமது நாட்டுப் பிரஜைகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (க-8)

# ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு நிதி உதவி

(கொழும்பு)

டித்வா சூறாவளியை அடுத்து ஏற்பட்ட பேரனர்த்தத்தினால் நாடு முகங்கொடுத்திருக்கும் மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு மேலும் ஒரு மில்லியன் யூரோ (370 மில்லியன் ரூபா) நிதியுதவியை வழங்க **ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.**

இந்நிதியுதவியானது மனிதாபிமான உதவி வழங்கல் அமைப்புக்கள் ஊடாக மக்களைச் சென்றடையும் எனவும், இந்நிதி அடிப்படை சேவை வழங்கல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்படும் எனவும் ஐரோப்பிய ஒன்றியம் **வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.** (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டுச் செய்திகள்

# வடமராட்சி அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்ட தொடர்; இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது உடுப்பிட்டி நவஜீவன்ஸ்

**கொலின்ஸ் விளையாட்டு கழகத்தினால் நடாத்தப்பட்டு வரும் 'MEMORIAL TROPHY ' கால்பந்தாட்ட தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர்.**



வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொலின்ஸ் விளையாட்டு கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் வடமராட்சி அணிகளுக்கான 'MEMORIAL TROPHY' கால்பந்தாட்ட தொடரின் அரையிறுதி ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கொலின்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இரு அணிகளுக்கும் கிடைத்த கோல் போடும் வாய்ப்புக்களை நழுவ விட்டுக் கொண்டிருந்தனர். இருப்பினும் கலைமதி வீரர் தவராஜ் அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு மிகச் சிறப்பான கோலாக மாறியது.

இதனால் முதல் பாதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இரண்டாவது பாதியாட்டம் இரு அணிகளுக்கும் பெரும் சவாலாக மாறியது. இரு அணிகளும் கோலை கம்பம் வரை கொண்டு சென்ற போதிலும் கோல் போடும் வாய்ப்புக்கள் நழுவவிடப்பட்டன.

இறுதி 5 நிமிடங்கள் திக் திக் ஆட்டமாக மாறியது. கலைமதி அணியினர் நவஜீவன்ஸ் அணி கோல் போடுவதை தடுக்கும் நோக்கில் தமது ஆட்ட வியூகத்தை மாற்றி அமைத்தனர்.

இதனால் நவஜீவன்ஸ் அணியினர் கலைமதி அணியினரின் கோல் பிரதேசத்தை நெருங்கிய போதிலும் கோல் போடுவதற்கு சிரமப்பட்டனர்.

இறுதி ஒரு நிமிடத்தில் கலைமதி அணியினரின் தடுப்பாளர்களையும் தாண்டி நவஜீவன்ஸ் அணி வீரர் சஜீவன் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். (3-90)

# பாகிஸ்தானின் அரையிறுதி கனவை கலைத்தது இலங்கை!

## அரையிறுதிக்கு முன்னேறியது நியூசிலாந்து

ஐ.சி.சி.ரி-20 உலக கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணிக்கெதிரான தீர்மானமிக்க போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றியடைந்த போதும் அரையிறுதிக்கான வாய்ப்பை இழந்து வெளியேறியது.

ரி-20 உலகக் கிண்ண தொடரின் 50 ஆவது லீக் ஆட்டம் கொழும்பில் நடந்தது. இதில் பாகிஸ்தான், இலங்கை அணிகள் மோதின. நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 212 ஓட்டங்கள் எடுத்தது. பர்ஹான் அதிரடியாக ஆடி சதமடித்து ஆட்டமிழந்தார். பகர் சமான் 84 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இலங்கை சார்பில் மதுஷனகா 3 விக்கெட்டும், தசுன் ஷனகா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 213 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இலங்கை களமிறங்கியது. பவன் ரத்நாயகே அரைசதம் கடந்து 58 ஓட்டங்கள் எடுத்தார். மற்ற வீரர்கள் நிலைத்து நிற்கவில்லை.

கப்டன் தசுன் ஷனகா இறுதி கட்டத்தில் சிக்சர், பவுண்டரிகளாக விளாசினார். அவர் 31 பந்துகளில் 8 சிக்சர்கள், 2 பவுண்டரிகள் உட்பட 76 ஓட்டங்கள் குவித்து அசத்தினார்.

இறுதியில், இலங்கை அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 207 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால் பாகிஸ்தான் 5 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இத் தொடரின் அரையிறுதிக்கான வாய்ப்பை ஏற்கனவே இலங்கை இழந்திருந்த நிலையில் பாகிஸ்தானும் அந்த வாய்ப்பை இழந்து வெளியேறியது இதனால் நியூஸிலாந்து அரையிறுதிக்குள் நுழைந்தது. (3)

# இந்திய பிரீமியர் லீக் தொடருக்கான உத்தியோகபூர்வ திகதி அறிவிப்பு




2026 ஆம் ஆண்டுக்கான இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் 28 ஆம் திகதி ஆரம்பமாகும் என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இந்தியாவின் அசாம், தமிழ்நாடு மற்றும் மேற்கு பங்களாதேஷ் ஆகிய மாநிலங்களில் நடைபெறவுள்ள சட்டசபைத் தேர்தல்கள் காரணமாக, தொடரின் ஆரம்ப மற்றும் இறுதித் திகதிகள் இதுவரை உறுதிப்படுத்தப்படாமல் இருந்தன.

முதலில் மார்ச் 26 ஆம் திகதி தொடரை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், தற்போதைய சூழலைக் கருத்திற்கொண்டு இரண்டு நாட்கள் தாமதமாக மார்ச் 28 இல் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இறுதிப் போட்டியை மே 31 ஆம் திகதி நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட மாநிலங்களின் தேர்தல் திகதிகள் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாததால், முழுமையான போட்டி அட்டவணையைத் தயாரிப்பது குறித்து ஐ.பி.எல் ஆளுநர்க் குழு அடுத்த வாரம் கூடி ஆலோசிக்கவுள்ளது.

2008 ஆம் ஆண்டு ஐ.பி.எல் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே, இந்தியாவில் பொதுத்தேர்தல் அல்லது மாநிலத் தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் போட்டி அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்படுவது வழமையான ஒன்றாகும். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசோலை வழங்கல்

(தருமபுரம்)

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 435 குடும்பங்களைச் சேர்ந்த 701 மாணவர்களுக்கான நிதி உதவி காசோலைகள் வழங்கும் நிகழ்வு கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ. சந்திரசேகர் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு மாணவர்களுக்கான காசோலைகளை வழங்கிவைத்தார். (8-316)

## மாணிக்கக்கல் அகழ்வு; ஒருவர் கைது

(கொழும்பு)

மஸ்கெலியா பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை, மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகளால் பிரவுன்ஸ் விக் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (8)



# கொள்கலன்களுக்குள் எரிபொருள் நிரப்ப வேண்டாம்

# மீறினால் கடும் நடவடிக்கை

## இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

**கொள்கலன்களுக்குள் எரிபொருள் வழங்க வேண்டாம் என்று அனைத்து எரிபொருள் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளோம். யாராவது கொள்கலன்களில் எரிபொருளைப் பெற்றுச் சென்று அதிக விலைக்கு விற்பனை செய்ய முயற்சித்தால், அவர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப் படும் என இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபன தலைவர் டி.ஜே.ராஜகருணா தெரிவித்துள்ளார்.**

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் ஏப்ரல் மற்றும் மே மாதங்கள் வரை முன்பதிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் கையிருப்புகள் கிடைப்பதில் எவ்வித தாமதமும் ஏற்படாது.

குறித்த எரிபொருட்கள் இந்தியா மற்றும் சிங்கப்பூரிலிருந்து கிடைக்கவுள்ளதாகவும் இதன் காரணமாக மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை இந்நாட்டின் எரிபொருள் விநியோகத்திற்குத் தடையாக அமையாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எரிபொருள் வரிசைகளில் காத்திருப்பதில் எந்தப் பயனும் இல்லை. நேற்றைய தினம் நாங்கள் எரிபொருள் விநியோகம் செய்யத் திட்டமிட்டிருக்கவில்லை. எனினும், பொது மக்கள் அதிகளவில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதால், விநியோகப் பணிகளில் ஈடுபடும் அனைத்து ஊழியர்களையும் நாம் பணிக்கு அழைத்தோம்.

அதேபோன்று இன்றைய தினம் பௌர்ணமி தினமாக இருந்தாலும், எரிபொருள் விநியோகம் தொடர்ந்து நடைபெறும் என தெரிவித்தார். (8)

## சட்டவிரோத சிகரெட்; ஒருவர் கைது

(கொழும்பு)

சட்ட விரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட பெருந்தொகையான சிகரெட்டுகளுடன் சந்தேக நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வருகை முனையத்தில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின்போதே இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சட்ட விரோதமான முறையில் கொண்டுவரப்பட்ட 36,000 சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## காந்திய அன்பர்கள் யாழ்ப்பாணம் வருகை



(யாழ்ப்பாணம்)

காந்திய இலக்கிய விருது மற்றும் மகரிஷி அருணாசலம் நினைவு விருது பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த பாலசரஸ்வதி மற்றும் சமூக செயற்பாட்டாளர் யோசப் ஆகிய காந்திய அன்பர்கள் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வருகை தந்து அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர்களைச் சந்தித்து இலங்கையில் காந்திய வேலைத் திட்டங்கள் தொடர்பாக உரையாடினர்.

இதன்போது காந்தீயம் பத்திரிகையும் அவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

தொடர்ந்து இரண்டு வாரங்கள் கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் தங்கி இருக்கும் அவர்கள் மாணவர்களுக்கான யோகாசனம், தியானம், இயற்கை வேளாண்மை, மூலிகைத் தோட்டம் மற்றும் தலைமைத்துவ பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

சங்கத்தின் தலைவர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் "காந்தீயம்" பத்திரிகை ஆசிரியர் எம். ஷாந்தன் சத்தியகீர்த்தி மற்றும் நிர்வாக உறுப்பினர்களான செ. சுப்பிரமணியம், க.செல்வக்குமாரன், ந.கணேசமூர்த்தி, சி.சிவரம்யா ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டனர். (8)

# மத்திய கிழக்கு நாடுகளில் பத்து இலட்சம் இலங்கையர்கள்

## புள்ளி விபரங்கள் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் 10 இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்கள் வசித்து வருவதாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

ஈரானில் போர்ப்பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், இந்தத் தரவுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன.


கடந்த மாதம் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின்படி, மொத்தம் 10 இலட்சத்து 7 ஆயிரத்து 855 இலங்கையர்கள் மத்திய கிழக்கில் தங்கியுள்ளனர்.

மத்திய கிழக்கில் உள்ள வெளிநாட்டுப் பணியாளர்களில் இலங்கையர்கள் கணிசமான பங்கினை வகிக்கின்றனர்.

குறிப்பாக வீட்டுப் பணி, கட்டுமானத் துறை, விருந்தோம்பல் மற்றும் சுகாதாரத் துறை என்பவற்றில் அவர்கள் அதிகளவில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் அனுப்பும் வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் இலங்கையின் பொருளாதாரத்திற்கு மிக முக்கியமான தூணாக விளங்குகின்றது.

இந்தநிலையில் மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் மோதல் நிலையை அடுத்து, பொதுமக்கள் மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த இராஜதந்திர ரீதியிலான அழுத்தங்களை இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

மேலும் அபாயகரமான பகுதிகளில் வசிக்கும் இலங்கையர்கள், வெளிவிவகார அமைச்சு வெளியிடும் பயண ஆலோசனைகளைப் பின்பற்றுமாறும், தூதரக அதிகாரிகளுடன் தொடர்ச்சியான தொடர்பில் இருக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (8)



கிளிநொச்சி தருமபுரம் நெத்தலி ஆறு முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மாசி மக அலங்கார உற்சவத்தின் தேர் திருவிழா நேற்றைய தினம் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது.

(படம்:தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்கள் குறித்து முறையான விசாரணைகள் நடக்கும்

## நீதியமைச்சர் ஹர்சன

**(கொழும்பு) ........................ இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்கள் தொடர்பில், எவ்வித அரசியல் தலையீடுகளுமின்றிச் சட்டத்தின் அடிப்படையில் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

நோர்வே பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின்போது, அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எஸ்பென் பார்த் ஐடே இலங்கையின் நிலவரம் குறித்து ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருந்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே நீதி அமைச்சர் ஹர்ஷண நாணயக்கார ஊடகங்களுக்கு விசேட விளக்கமளித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் உள்ளிட்ட கடந்த காலப் பிரச்சினைகள் குறித்துச் சட்ட ரீதியான விசாரணைகள் துரிதப்படுத்தப்படும். இதில் அரசியல் தலையீடுகள் எவையும் இருக்காது. உண்மைகளைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினர் வசமுள்ள மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கம் எமது அரசுக்கு இல்லை. இராணுவமயமாக்கல் தொடர்பான கவலைகளுக்குச் செயல்முறை ரீதியான தீர்வுகள் எட்டப்படும்.

வடக்கு - கிழக்கில் மதத் தலங்கள் தொடர்பாக நிலவும் சர்ச்சைகள் மற்றும் மத உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் குறித்து அரசு விசேட கவனம் செலுத்தி வருகின்றது. அனைத்து இன மக்களும் எவ்வித அச்சமுமின்றித் தமது மதங்களைப் பின்பற்றுவதற்கான சமத்துவமான சூழல் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்.

மனித உரிமைகள் தொடர்பில் சர்வதேச சமூகம் எழுப்பும் நியாயமான கேள்விகளைப் புறக்கணிக்காது, அவற்றுக்கு உரிய முறையில் பதிலளிக்கப்படும். குறிப்பாக, ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கும், சர்வதேச இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

யுத்தத்தால் ஏற்பட்ட வடுக்களை ஆற்ற வேண்டியதும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் பதிலளிக்க வேண்டியதும் அரசின் தார்மீகப் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டிய நீதி அமைச்சர், இதற்காக ஏற்கனவே உள்ள பொறிமுறைகள் வலுப்படுத்தப்பட்டு, தேவையான சட்டத்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் உறுதியளித்தார். (8)



கொமர்ஷல் வங்கியின் நிலைபேறுதகு எதிர்காலம் நோக்கி என்ற தொனிப்பொருளின் கீழ் பிளாஸ்டிக்கிலிருந்து சுற்றுச் சூழலை பாதுகாக்கும் நோக்கோடு பிளாஸ்டிக்போத்தல்கள் சேகரிக்கும் கூடுகள் இரண்டினை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் நிகழ்வானது கடந்த வெள்ளிக்கிழமை,கொமர்சல் வங்கி யாழ்ப்பாணக்கிளையின் சிரேஷ்ட முகாமையாளர் யோகச்சந்திரா தலைமையில் வங்கிக்கிளையின் வளாகத்தில் நடைபெற்றது. (படம்- சிவசாந்தன்)

# நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு பிரதேச செயலகம் சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பேரவை மற்றும் கலாசார அதிகார சபைகளுடன் இணைந்து நடத்தும் கலாதரம் இதழ் 6 நூல் வெளியீட்டு விழாவானது நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் கல்விக்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய் கலாசார அதிகார சபைகளின் தலைவரும், பிரதேச செயலாளருமான குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மத்திய மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் திருமதி. சுபாஜினி மதியழகன், சிறப்பு விருந்தினராக "சாகித்திய ரத்னா" ஐ.சாந்தன், கௌரவ விருந்தினர்களாக நவாலியூர். நந்தகுமார் சத்தியவாணி தம்பதியினர் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் மதிப்பீட்டுரையை வலம்புரிப் பத்திரிகை பிரதம ஆசிரியர் நல்லையா விஜயசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். (நி)

# மாநகர முதல்வர் தலைமையில் திண்மக்கழிவகற்றல் செயற்றிட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர எல்லைக்குட்பட்ட குடியிருப்புகளற்ற பல்வேறு தனியார் வெற்றுக் காணிகள், வீதி ஓரங்கள் மற்றும் பொது இடங்களில் பொதுமக்கள் பலரும் சமூகப் பொறுப்பற்ற வகையில் தமது வீட்டு திண்மக்கழிவுகளை எழுந்தமானமாக வீசுவதும், இதனால் பொது இடங்கள் மிகுந்த துர்நாற்றத்துடன் காணப்படுவதும், அவ் வீதியூடான போக்குவரத்தின் போது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்வதையும் அண்மைக் காலமாக அவதானிக்க முடிந்தது.

இந் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்படி இடங்களில் வீசப்பட்டுள்ள திண்மக்கழிவுகளை அகற்றுவது தொடர்பில் மாநகர முதல்வர் திருமதி வி.மதிவதனி தலைமையில் விசேட வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் மாநகரில் **பொது இடங்களில் உள்ள கழிவு**களை அகற்றுவதற்காக சுகாதாரக் குழு தலைவர் சாரூபன் தலைமையிலான குழுவின் கீழ் ஐந்து சுகாதார ஊழியர்கள், உழவு இயந்திரம் மற்றும் ஜே.சி.பி இயந்திரம் உள்ளடங்கலான ஆளணி மற்றும் வாகன வளங்கள் விசேடமாக வழங்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றது.

இவ் விசேட திண்மக்கழிவகற்றல் வேலைத்திட்டத்தை முதல்வர் வி.மதிவதனி நாயன்மார்க்குளப் பகுதி, மற்றும் குளத்திற்கான பிரதான வீதி அருகாமையில் உள்ள வெற்றுக்காணியில் போடப்பட்டுள்ள கழிவுகளை அகற்றும் வேலைத்திட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் சுகாதாரக் குழு உறுப்பினர்கள், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 250 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 160 | 180 | 150 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 250 | 300 |
| தக்காளி | 100 | 100 | 120 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 250 | 200 |
| கோவா | 100 | 80 | 180 | 150 |
| கரட் | 250 | 330 | 400 | 400 |
| பூசணி | 120 | 120 | 100 | 200 |
| புடோல் | 150 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 150 | 180 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 500 | 400 | 450 | 350 |
| வெண்டக்காய் | 250 | 250 | 300 | 200 |
| கருணைக் கிழங்கு | 250 | 300 | 300 | 300 |
| பயற்றங்காய் | 600 | 400 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 300 | 380 | 300 |
| பீற்றூட் | 100 | 100 | 180 | 120 |
| கறிமிளகாய் | 400 | 350 | 500 | 300 |
| முருங்கைக்காய் | -- | 5000 | 3000 | 3000 |
| போஞ்சி | 350 | 200 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 300 | 200 | 300 | 250 |
| கீரை - 1 பிடி | 100 | 80-150 | 150 | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 170 | 100 | 120-180 |
| இராசவள்ளி | 300 | 500 | 400 | 350 |
| வெங்காயப்பூ | 120 | 80 | 150 | 200 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 150 |
| பொன்னாங்காணி | 150 | 100 | 180 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 |
| [illegible] | 100 | 200 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையிலுள்ள வெளிநாட்டவர்களுக்கு
# விசா சலுகை காலம் நீடிப்பு

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் மற்றும் வானூர்தி சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் இலங்கையில் சிக்கியுள்ள வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளுக்கு வழங்கப்பட்ட விசா சலுகை காலத்தை இரண்டு வாரங்களாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் இந்த விசேட அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.


முன்னதாக ஒரு வாரமாக (7 நாட்கள்) அறிவிக்கப்பட்டிருந்த விசா சலுகை காலம், தற்போது இரண்டு வாரங்களாக (14 நாட்கள்) அதிகரிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கு வான்பரப்புகள் மூடப்பட்டமை மற்றும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட வானூர்தி சேவைகள் ரத்து செய்யப்பட்டதால் வெளிநாட்டுப் பயணிகள் அவர்களது நாடுகளுக்கு திரும்புவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இலங்கையில் தங்கியுள்ள வெளிநாட்டவர்கள் எவ்வித அபராதமுமின்றி மேலதிகமாக 14 நாட்கள் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (8)

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்;
# மைத்திரி- ரணிலுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்க உத்தரவு!





(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கைக்கு அமைய, பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது.

குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு, கடிதம் ஒன்றின் ஊடாக இதற்கான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதற்கமைய, ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை ஆய்வு செய்து, தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ஆணைக் குழுவால் பெயரிடப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சம்பவம் இடம்பெற்ற காலப் பகுதியில் பிரதமராக செயற் பட்ட ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜெயசுந்தர, முன்னாள் பொலிஸ் சிரேஸ்ட அதிகாரிகளான சிசிர மெண்டிஸ், நிலந்த ஜெயவர்தன, நந்தன முனசிங்க, லலித் பத்திநாயக்க, தேசபந்து தென்னகோன், வசந்த விக்ரமசிங்க, P.L.பெரேரா மற்றும் A.S.லத்தீப் ஆகியோர் அடங்குவர்.

இந்த நிலையில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் மேலதிக மன்றாடியார் நாயகம் திலீப பீரிஸ் மற்றும் பிரதி மன்றாடியார் நாயகம் மாதவ தென்னகோன் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

தமது பரிந்துரைகளுக்கு அமைய, விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு குறித்த கடிதத்தின் ஊடாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. (8)


## வடக்கு கிழக்கு முழுவதும்
# பயங்கரவாதச் சட்டங்களுக்கு எதிராக 29,069 கையெழுத்துக்கள் சேகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க கோரியும், அரசைப் பாதுகாக்கும் புதிய பயங்கரவாத தடைச்சட்ட முன்மொழிவைக் கைவிடக்கோரியும் அரசை வலியுறுத்தி, வடக்கு - கிழக்கு தமிழ் சிவில் சமூக அமைப்புக்களால் 29 ஆயிரத்து 69 கையெழுத்துக்கள் திரட்டப்பட்டுள்ளன.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் வடக்கு-கிழக்கு முழுவதும் சிவில் சமூக அமைப்புக்களால் நடத்தப்பட்ட கையெழுத்துப் போராட்டம் கடந்த வெள்ளிக்கிழமை நிறைவுக்கு வந்தது.

அதனையடுத்து நேற்று முன்தினம் திரட்டப்பட்ட அனைத்துக் கையெழுத்துக்களும் நீதியமைச்சுக்குத் தபாலிடப்பட்டுள்ளன. பிரதி செய்யப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களுக்கும், இந்தியா, அமெரிக்கா, சுவிஸ், சீனா உள்ளிட்ட தூதரகங்களிடம் நேரில் கையளிக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



சாவகச்சேரி மடத்தடி ஏ9 வீதி அருகில் கடந்த புதன் கிழமை அம்மாச்சி உணவகம் திறந்து வைக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில், சாவகச்சேரி நகரசபைக்கு சொந்தமான காணியில் அம்மாச்சி உணவகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படம்-சுபேசன்)

## யாழ்.பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில்
# குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 13 சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய இரண்டு பெண்கள் உள்ளிட்ட 13 பேர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தமை மற்றும் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையோரே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

யாழ்.நகரில் மருந்தகம் ஒன்றை உடைத்து இரண்டு இலட்சம் ரூபா பணம் மற்றும் கையடக்க தொலைபேசியை கொள்ளையடித்த ஒருவரும், நெடுங்குளம் பகுதியில் வீடு உடைத்து நான்கரை இலட்சம் ரூபாய் கொள்ளையடித்த ஒருவரும் போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 11 பேரும் கைது செய்யப்பட்டனர்.

கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மேலும் மூன்று பேரை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்கு பின்னர் சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (8-33)

# மசகு எண்ணெய், எரிவாயு விலைகள் அதிகரிப்பு!

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு ஆகியவற்றின் விலைகள் நேற்றைய தினம் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளன.

உலகளாவிய எரிசக்தி சந்தை நிலவரப்படி, WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 67.02 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

அதேவேளை, சர்வதேச ரீதியில் அதிகம் பயன்படுத்தப்படும் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 72.87 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

மசகு எண்ணெயைத் தொடர்ந்து, இயற்கை எரிவாயுவின் விலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, அதன் விலை 2.859 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் போர் பதற்றமான சூழல்களுக்கு மத்தியில், சர்வதேசச் சந்தையில் ஏற்பட்டுள்ள இந்த விலையேற்றம் உலக நாடுகளின் எரிபொருள் இறக்குமதிச் செலவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனப் பொருளாதார ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (8)

போதை ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு கட்டமாக நெல்லியடி பொலிஸாரால் முச்சக்கர வண்டிகளிற்கு ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நடவடிக்கை நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் நெல்லியடி பஸ்தரிப்பு நிலையத்தில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (படம்- மகாலிங்கம்)




## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ். வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

074 196 4945

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C-5090)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி எரிகிறது ம

## அமெரிக்கா-இஸ்ரேல் இணைந்து

### படைப்பலம் பேராபத்தில் முடியும் ஐ.நா அவசர எச்சரிக்கை



(வொஷிங்டன்)

அனைத்து உறுப்பு நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனம் உட்பட சர்வதேச சட்டத்தின் கீழ் தங்கள் கடமைகளை மதிக்க வேண்டும் என ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மத்திய கிழக்கில் இராணுவ தீவிரப்பாட்டை நான் கண்டிக்கிறேன். ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைபலத்தைப் பயன்படுத்துவதும், அதைத் தொடர்ந்து பிராந்தியம் முழுவதும் ஈரான் பழிவாங்குவதும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

"எந்தவொரு நாட்டின் பிராந்திய ஒருமைப்பாடு அல்லது அரசியல் சுதந்திரத்திற்கு எதிராகவோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்க ளுக்கு முரணான வேறு எந்த வகையிலும் படைபலத்தைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத் தலை" சாசனம் தெளிவாகத் தடை செய்கிறது.

ஐ.நா. சாசனம் உட்பட சர்வதேச சட்டத்தின்படி, சர்வதேச மோதல் களை அமைதியான முறையில் தீர்ப்பதற்கு வேறு எந்த சாத்தியமான மாற்று வழியும் இல்லை என்பதை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன் எனத் தெரிவித்திருந்தார். (3)

### ஈரானின் உச்ச தலை

### உயிரிழப்

ஈரானின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி கமேனி உயிரிழந்தமையை ஈரானிய அரசு தொலைக்காட்சி உறுதிப்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் சனிக் கிழமை, அதிகாலை தாக்குதல் நடந்த நேரத்தில் தனது கடமை களைச் செய்து கொண்டிருந்தபோது அவரது வீட்டில் உள்ள அலுவலகத்தில் கொல்லப்பட்டதாக ஈரானிய அரசு ஊடகமான ஃபார்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள் ளது.

அமெரிக்க உளவுத்துறை அதிநவீன அமைப்புகள் மூலம் அவரது இருப்பிடம் கண்காணிக்கப்பட்டு இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

இதேவேளை, தாக்குதல்களின் பின் னர், இடிபாடுகளுக்குள் இருந்த கமே னியின் உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக வும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

மேலும் கமேனியின் மகள், மருமகன் மற்றும் பேரக்குழந்தையும் இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டதாக ஈரானிய

அரசு ஊ
இஸ்
இணை

### ஈரான் பாடசாலை மீது தாக்குதல் 120 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது நடத்தி வரும் பாரிய வான்வழித் தாக்குதல்களின் ஒரு பகுதியாக, தெற்கு ஈரானில் உள்ள ஒரு பாடசாலை மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் குறைந்தது 120 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹோர்முஸ்கான் மாகாணத்தில் உள்ள மினாப் நகரில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றே மூன்று ஏவுகணைத் தாக்குதல்களுக்கு உள்ளாகியுள்ளது.

குறித்த பாடசாலை ஈரானின் புரட்சிகர காவற்படை தளத்திலிருந்து 600 மீற்றர் தொலைவில் அமைந்துள்ள நிலையிலேயே இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இதேவேளை இஸ்ரேல் மற்றும் அமெரிக்கப் படைகள் மேற்கொண்ட தாக்குதல்களால் ஈரானில், இதுவரை 201 பேர் பலியாகியுள்ளதாகவும், 747 பேர் காயமடைந்துள்ளதாகவும் ஈரானிய செம்பிறைச்சங்கம் தெரிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் இந்தத் தாக்குதலை ஒரு "காட்டுமிராண்டித்தனமான செயல்" என்றும், "ஆக்கிரமிப்பாளர்களால் செய்யப்பட்ட மற்றுமொரு கறுப்புப் பக்கம்" என்றும் வன்மையாகக் கண்டித்துள்ளார். (3)





### ஈரானின் அடுத்த தல

(டெஹ்ரான்)

ஈரானின் உச்சத் தலைவர் அயதுல்லா அலி கமேனி அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் உயிரிழந்ததாக ஈரானிய அரச ஊடகங்கள் உறுதிப்படுத்தியுள்ள நிலையில், கமேனிக்கு அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்ட வாரிசு எவரும் இல்லாத நிலையில், அடுத்த உச்சத் தலைவர் யார் என்பது தொடர்பில் பல்வேறு தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் புதிய தலைவரைத்

தேர்வு செய்யும் பொறுப்பு 88
ஷ்ட மதத்தலைவர்களைக் கொ
"நிபுணர்கள் சபை" எனப்ப
தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பி
உள்ளதாகத் தெரியவருகிறது.

இதன்படி, குறித்த பதவி
சாத்தியமான போட்டியாளர்க
மொஜ்தபா கமேனி (56), அலி
அரபி (67), மொஹம்மது மெ
மிர்பாகேரி (60), ஹசன்கொ
(50), மற்றும் ஹாஷெம் ஹொ
புஷெஹ்ரி (60) ஆகிய ஐவ
பெயர்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில், ஈரானின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலைவன பூமி

## ந்து ஈரான் மீது கொடூரத் தாக்குதல்

## லைவர் ப்பு!



வீன
பிடம்
ந்தல்


பின்
கமே
தாக
கின்

மகன்
ந்தத்
னிய

அரசு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இஸ்லாமிய புரட்சிகர காவல்படையுடன் இணைந்த ஃபார்ஸ் செய்தி நிறுவனத்தின்படி, கமேனியின் மருமகளில் ஒருவரும் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (3)

## பழிவாங்கும் நேரம் வந்து விட்டது!



## ஈரான் இராணுவம் சூளுரை

(டெஹ்ரான்)

ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி மரணத்தைத் தொடர்ந்து, ஈரான் புதிய எச்சரிக்கையை விடுத்துள்ளது. இஸ்ரேல் மற்றும் அமெரிக்கத் தளங்கள் மீது வரலாற்றில் இல்லாத மிகப்பெரிய தாக்குதலைத் தொடங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. மிக விரைவிலேயே இந்த தாக்குதலைத் தொடங்கப் போவதாகவும் அதற்குத் தயாராகி வருவதாகவும் ஈரான் புரட்சிகர பாதுகாப்புப் படை அறிவித்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில், ஈரான் அரச ஊடகங்கள் இது தொடர்பான அறிக்கையை வெளியிட்டன.

அத்துடன் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் உளவுத் துறைத் தலைவர் மொஹமட் கசெமி கொல்லப்பட்டார்.

இந்நிலையில் ஈரானின் புரட்சிகர காவல்படையின் புதிய தளபதியாக ஜெனரல் அகமது விஹிதி நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



## த தலைவர் யார்?

ம் பொறுப்பு 88 சிரே
வர்களைக் கொண்ட
சபை" எனப்படும்
ப்பட்ட அமைப்பிற்கு
தரியவருகிறது.

குறித்த பதவிக்கு
போட்டியாளர்களாக
மனி (56), அலிரேசா
மாஹம்மது மெஹ்தி
0), ஹசன்கொமேனி
ஹாஷெம் ஹொசைனி
0) ஆகிய ஐவரின்
ளியாகியுள்ளன.

பில், ஈரானின் அரசியல் மற்றும் மத அமைப்புகளில் முக்கிய பங்கு வகிக்கும் நிபுணர்கள் சபை, அடுத்த உச்சத் தலைவரைத் தேர்வு செய்யும் வரை அதிகார அமைப்பில் நிச்சயமற்ற நிலை தொடரலாம் என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசியல் சமநிலைகள், பாதுகாப்பு அமைப்புகளின் ஆதரவு மற்றும் மதஅமைப்பின் ஒப்புதல் ஆகியவை இறுதி முடிவை தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக பார்க்கப்படுகின்றன. (3)

## கண்ணீரில் மூழ்கியது ஈரான்

## 40 நாட்கள் துக்கதினம் பிரகடனம்



(டெஹ்ரான்)

ஈரானின் உச்ச தலைவரான அயதுல்லா அலி கமேனி கொல்லப்பட்டுள்ள நிலையில், இரங்கல் தெரிவிக்கும் வகையில் வீதிகளில் இறங்கி துக்கம் அனுஷ்டிக்கும் வகையிலான காணொளிகள் வெளியாகியுள்ளன.

ஈரானின் பார்ஸ் செய்திச் சேவை இது தொடர்பான காணொளிகளை வெளியிட்டுள்ளது.

நகரின் மையப் பகுதியில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பாதுகாப்புப் படையினரை எதிர்த்து போராடி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், போராட்டத்தில் ஈடுபடும் எதிர்ப்பாளர்கள் கொடிகளை அசைத்து, கோஷங்களை எழுப்புவதோடு, அங்குள்ள அமெரிக்க தூதரகத்தை முற்றுகையிட போராட்டக்காரர்கள் அணிதிரள்வதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானில் 40 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என ஈரான் அரசு அறிவித்துள்ளது.

அத்துடன் ஈரானின் உயர் தலைவரின் மறைவை முன்னிட்டு அந்நாட்டில் ஒரு வாரத்துக்கு பொது விடுமுறையும் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிட்ரஸ் பழங்களின் மருத்துவ நன்மைகள்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

நாள்தோறும் உயிர்ச்சத்து C நிறைந்த சிட்ரஸ் பழங்களை உண்பதால் நோய்களின் தீவிரம் குறையும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். எலுமிச்சை, நாரத்தை, தோடை, காட்டுத்தேசி, கொடி எலுமிச்சை போன்ற இனங்கள் சிட்ரஸ் பழங்களில் அடங்கும்.

நோய் எதிர்ப்பு ஆற்றலை வளர்த்து, உடலைக் குணப்படுத்த உதவும். ஊட்டச்சத்துக்கள் அவற்றுள் நிரம்பியுள்ளன. அவற்றை உண்பதால் உடல்நலத்திற்குப் பல நன்மைகள் விளையும்.

ஒரு தோடம்பழத்தில் 83 மில்லி கிராம் உயிர்ச்சத்து 'C' உள்ளது. பாதி நாரத்தம் பழத்தில் 46 மில்லி கிராம் விற்றமின் C உள்ளது. பொதுவாக நம் உடலுக்கு ஒரு நாளில் 75 முதல் 90 மில்லிகிராம் வரையிலான விற்றமின் 'C' பரிந்துரைக்கப்படுகிறது.

"சிட்ரஸ்" பழங்களை உண்பதால் போதியளவு விற்றமின்'C' எளிதில் கிடைக்கும். அதுமட்டுமல்லாமல் நோய் எதிர்ப்பு மண்டலத்தில் விற்றமின் 'C' முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக நோய் எதிர்ப்பு ஆற்றலுக்கான உயிரணுக்களை உருவாக்க விற்றமின் 'C' உதவுகிறது. சிட்ரஸ் பழங்களில் அதிகம் காணப்படும் விற்றமின் 'C' ஆனது காயங்களை குணப்படுத்தவும், திசுக்களின் வளர்ச்சிக்கும் மிக முக்கியம். இது தோல், தசைகள், இரத்த நாளங்களை சீராக வைத்திருக்கவும் உதவுகிறது. மேலும் விற்றமின் C ரொனிக், மாத்திரைகள் இருப்பினும் ஒரு முழு "சிட்ரஸ்" பழத்தை உண்பதன் மூலம் நார்ச்சத்து, நீர்ச்சத்து போன்ற நன்மைகள் மேலும் 



சிறந்தவையாகும்.

சிட்ரஸ் பழங்களில் உள்ள விற்றமின் C ஆனது, ஓர் "ஆண்டி ஆக்சிடன்ட்" ஆகும். இது உடல் வீக்கத்தை குறைப்பதோடு, புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கும் ஆற்றலும் உண்டு. "சிட்ரஸ்" பழங்களை சாறாக அருந்தும் போது அவற்றில் உள்ள நன்மை பயக்கும் நார்ச்சத்து அழியக்கூடும். அதனால் பழங்களை அப்படியே உண்பது சிறந்தது. "சிட்ரஸ்" பழங்களில் உள்ள ஆன்டி ஆக்ஸிடன்கள் இரத்த அழுத்தத்தைக் குறைத்து கொழுப்பைக் கட்டுப்படுத்தி இதயத்திற்கு நன்மை பயக்கின்றன.

நார்ச்சத்து அதிகம் உள்ளதால் செரிமானத்தை சீராக்கி உடல் எடையைக் குறைக்கவும் உதவுகின்றது. இதில் காணப்படும் விற்றமின் 'C' ஆனது கொலாஜன் உற்பத்தியை அதிகரித்து சருமத்தை இளமையாகவும், பொலிவாகவும் வைத்திருக்க உதவுகிறது. சிட்ரஸ் பழங்களில் உள்ள சிட்ரிக் அமிலம் சிறுநீரக கற்கள் உருவாகும் அபாயத்தை குறைக்க உதவும். உடலுக்குத் தேவையான நீர்ச்சத்தை வழங்கி உடலானது புத்துணர்ச்சியுடன் இருக்க உதவுகிறது.

மேலும், சிட்ரஸ் பழங்களை அளவோடு உட்கொள்வது சிறந்தது. அதிகப்படியான நுகர்வு அமிலத் தன்மை (Acidity) அல்லது பற்களின் உணர்திறனை (Tooth Sen sitivity) ஏற்படுத்தலாம். சிட்ரஸ் பழங்களில் விற்றமின் C, நார்ச்சத்து, நீர்ச்சத்து என்பவற்றை விட மேலும் துத்த நாகச்சத்து, செம்புச்சத்து இரும்புச்சத்து போன்றனவும் காணப்படுகிறது.

சிட்ரஸ் பழங்களில் காணப்படும் அஸ்கார்பிக் அமிலம், தியாமின், உயிர்ச்சத்து $B_2$,$B_3$ போன்றவை சிட்ரஸ் பழங்களில் உள்ளன. சிட்ரஸ் பழங்களை உட்கொள்வது இரத்த நாளங்களுக்கு நிவாரணம் அளிக்கிறது. இதன் காரணமாக ஆக்ஸிஜன் நிறைந்த இரத்தம் உடல் முழுவதும் பரவுகிறது.

சிட்ரஸ் பழங்களில் பொஸ்பரஸ் மற்றும் செலினியம் உள்ளன. அவை டி.என்.ஏ வை மேம்படுத்தி உடல் முழுவதும் ஆற்றலை சமமாக விநியோகிக்கின்றன. இதில் காணப்படும் செலானியம் மூளைக்கலங்களை பலப்படுத்தக்கூடியது. மன அழுத்தத்தை குறைக்கக்கூடியது. சிட்ரஸ் பழங்களை சாப்பிடும் போது மனச்சோர்வு அல்லது பதட்டம் போன்ற அறிகுறிகளைப் போக்குகிறது.

இரத்தத்தை சுத்திகரிப்பதற்கு நாரத்தம் பழச்சாறு எடுத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து தினமும் 200 மில்லி அளவு அருந்தலாம். சித்த மருத்துவத்தில் சிட்ரஸ் பழங்களுள் எலுமிச்சை, நாரத்தை இரண்டிற்கும் அதிக மருத்துவ குணங்கள் உள்ளதால் அதிகளவில் பயன்படுத்துகிறது. நாரத்தம் பழச்சாறு வாந்தியைக் கட்டுப்படுத்தக் கூடியது.

நாரத்தங்காய் சிட்ரஸ் பழங்களுள் மிக அதிகமான புளிப்புச் சுவை உடையது. பழுத்த நாரத்தங்காயில் அதிக புளிப்புச் சுவை காணப்படும். இதில் உயிர்ச்சத்து C யும் சிற்றிக் கமிலமும் அதிகளவில் காணப்படும். பசியை தூண்டக்கூடியது. வயிற்றில் வாய்வுத் தொல்லை இருப்பவர்கள் நாரத்தம்பழம் சாற்றை வெந்நீர் கலந்து குடிக்க வேண்டும். நாரத்தம்பழச்சாறு இருதய நோய்கள், இருதய தமணி தடிப்பு போன்றன ஏற்படும் அபாயத்தை குறைக்கக் கூடியது. கர்ப்பக் காலத்தில் ஏற்படும் வாந்தி, குமட்டல் நீங்க இளஞ்சூட்டு நீரில் நாரத்தம் பழச்சாறும் ஒரு தேக்கரண்டி தேனும் சேர்த்து அருந்தலாம். பக்கவிளைவுகளும் ஏற்படாது.

அதே போல சிறுநீரகங்களில் தேங்கும் தேவையற்ற கழிவுகளை வெளியேற்றுவதற்கும் இவ் சிட்ரஸ் பழங்களில் காணப்படும் நீர்ச்சத்து உதவியாக இருக்கும். மிகக் குறைவான அளவு கலோரிகளைக் கொண்டது. அதேசமயம் அதிக ஊட்டச்சத்துக்களும் இதில் இருக்கின்றன.

அதனால் குறிப்பிட்ட சீசனில் இவ்வகைப் பழங்கள் கிடைக்கும் போது தினமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அத்துடன் உடலை நீரேற்றத்துடன் வைத்திருக்க உதவும்.

# இராசிபலன்

02.03.2026
மாசி 18 , திங்கட்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 6.28 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 8.18 மணிவரை

சுப நேரம் 12.27- 1.57 மணிவரை
இராகு காலம் 7.57-9.27 மணிவரை
மாசி மகம் நடேசர் அபிஷேகம்

சந்திராஷ்டமம்
உத்தராடம்.

வளவன்



**மேஷம்**
பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், வழிபாட்டில் ஆர்வம் கூடும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.



**கடகம்**
உங்களின் யோசனைக்கு நல்ல பாராட்டுகள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாக்கு மேன்மையுண்டு.



**துலாம்**
அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் வாய்ப்புண்டு.



**மகரம்**
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பயணத்தின் போது வெளியாட்களில் கவனம் தேவை.



**ரிஷபம்**
தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், விருந்தினர்கள் வருகையுண்டு, பயணங்கள் கைகூடும்.



**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், அனுபவ வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, போசன சுகமுண்டு.



**விருச்சிகம்**
தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.



**கும்பம்**
மதிநுட்பத்தால் மகத்தான காரிய மொன்றை ØÄFm x ½©¬ úï ^ , சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் வாய்ப்புண்டு.



**மிதுனம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கன்னி**
அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.



**தனுசு**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், பயணங்களால் பலனுண்டு.



**மீனம்**
உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

வாழ்வதன் பொருள் இடைவிடாது முயற்சி செய்தல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 iv

## யாழ்.போதனா வைத்தியசாலை

புருசோத்தமன்




(27.02.2026 தொடர்ச்சி)

தரிசனம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலைத் தரிசனம் நிறைவுற்றதும் ஏனைய நிறுவனங்கள், அரச அமைப்புகள் தொடர்பில் தரிசனம் வெளிவரும்.

யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பில் எழுதப்படுகின்ற விடயங்கள் பற்றி பலரும் தொடர்பு கொண்டு தமது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நீங்கள் எழுதுவது முற்றிலும் உண்மை என்பதாகப் பொதுமக்களின் கருத்துக்கள் உள்ளன.

அதேவேளை யாழ். போதனா வைத்தியசாலை என்ற ஒரு பரந்த நிறுவனம் தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் அங்கு பணியாற்றுகின்ற மருத்துவர்கள், இதர பணியாளர்களின் மனங்களைப் பாதிக்கலாம் என்ற கருத்துக்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இங்குதான் தரிசனம் குறித்தான விளக்கத்தை முன்வைக்க வேண்டியுள்ளது.

ஆம், தரிசனத்தின் திரை விலகிய முதல் நாளில் தரிசனம் பற்றிய விளக்கங்களைப் பதிவு செய்திருந்தோம்.

தரிசனம் என்பது எவருக்கும் எதிரானதன்று. தவிர, மற்றவர்களுடைய கருத்துக்களுக்கும் விளக்கங்களுக்கும் உரிய களம் கொடுக்கப்பட வேண்டும் என்பதிலும் நாம் மிகவும் உறுதியாக உள்ளோம்.

இங்கு யாழ்.போதனா வைத்தியசாலை தொடர்பிலான தரிசனங்கள், யாருக்கேனும் மனச்சஞ்சலத்தை ஏற்படுத்துமாக இருந்தால் அது கண்டு நாம் மனம் வருந்துகின்றோம்.

உண்மையில் யாழ். போதனா வைத்தியசாலை எங்கள் உயிர் காக்கும் உன்னதமான ஆலயம்.

அங்கு கடமையாற்றுகின்ற மருத்துவர்களே கடவுளர்கள். அங்கு பணியாற்றும் துணை மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் ஆலயத்தில் இருக்கக்கூடிய பரிவார மூர்த்திகள்.

வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆலயத்தை வழி நடத்துகின்ற அறம்காவலர்.

ஏனைய நிர்வாகத் தரப்பினர் ஆலயத்திற்கு வருகின்ற அடியார்களுக்கு (நோயாளர்கள்) உரிய கடவுள் தரிசனம் கிடைக்கப்பெற்று சுகத்துடனும் மன ஆரோக்கியத்துடனும் வீடு செல்வதற்கு வேண்டிய உதவிகளைச் செய்பவர்கள்.

இங்கு ஆலயத்திற்கு வருகின்றவர்கள் அனைவரும் சுகம் பெற்று வீடு செல்வதென்பது நடைமுறைச் சாத்தியமன்று.

சிலர் முத்திப்பேறும் அடைவர். அஃது தவிர்க்க முடியாததே.

ஆயினும் ஒருவரின் இறப்பு என்பது அவரின் உறவுகளுக்கு இழப்பே.

தவிர, அந்த இழப்பு திடீரென ஏற்பட்டதாகவோ அன்றி இளம் வயதில் நடந்துவிட்டதாகவோ இருந்தால், அந்த இழப்பை உற்ற உறவுகளால் நிச்சயம் ஜீரணிக்க முடியாது.

இங்கு தான் உயிரிழந்த நோயாளி தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் அணுகுமுறையும் அரவணைப்பும் எவ்வாறாக இருந்தது எனப் பார்க்கப்படுகிறது.

உண்மையிலேயே மருத்துவர்களும் இதர மருத்துவ உத்தியோகத்தர்களும் கடும் பிரயத்தனம் மேற்கொண்டும் உயிரைக் காப்பாற்ற முடியவில்லை எனும் போது, விதியை நோவதைத் தவிர வேறு வழியில்லை.

உண்மை. யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியோடு கூடிய நன்றி நவிலல் பத்திரிகைகளில் வெளிவருவதைப் பார்த்திருக்கின்றோம்.

அதில், யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை அளித்த மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், தேவையான அத்தனை உதவிகளையும் வழங்கிய வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட நிர்வாகத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என மரணித்தவரின் குடும்பத்தினர் வெளிப்படுத்துகின்ற அந்தப் பதிவை எவரும் சாதாரணமாகக் கருதி கடந்து விடக்கூடாது.

மாறாக, அந்த நன்றி கூறல் என்பது யாழ்.போதனா வைத்தியசாலை அளித்த சிகிச்சையை-உயிரைப் பாதுகாக்க அவர்கள் எடுத்த முயற்சியை இதயத்தால் ஆராதிக்கின்ற வார்த்தைகள் என்பதைத் தயவுசெய்து யாழ். போதனா வைத்தியசாலைச் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், இவ்வாறான நன்றி கூறல்; ஒரு தனியார் வைத்தியசாலைக்குக் கிடைத்திருக்குமா? என்றால் இல்லவே இல்லை.

தவிர, இவ்வாறு சிகிச்சை அளித்த மருத்துவர்களுக்கும் இதர பணியாளர்களுக்கும் நன்றி கூறுகின்ற பண்பாட்டை தென்பகுதியிலோ அன்றி உலகின் வேறு எந்த நாடுகளிலோ நாம் காண முடியாது.

ஆக, மருத்துவர்களை கடவுளாகவும் அவர்களை உயரிய இடத்திலும் வைத்து ஆராதிக்கின்ற பெருந்தன்மை நம் தமிழ் மக்களிடம் மட்டுமே உண்டு. இந்த உண்மையை யாழ்.போதனா வைத்தியசாலையினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இருந்தும் ஒரு குறிப்பிட்ட மருத்துவர்கள்-குறிப்பிட்ட தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பகுதி சுகாதாரப் பணியாளர்கள், நோயாளர்களை மதிக்காதவர்களாகவும்-கண்டபாட்டில் ஏசுகின்றவர்களாக இருக்கின்றனர் என்ற இந்த உண்மையை தயவு செய்து சுயநலம் சார்ந்து எவரும் நிராகரித்து விடாதீர்கள்.

**நாளை தொடரும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 990





நந்தினி! மறந்து விட்டாயா, என்ன? மணிமேகலை! எங்களை ஏமாற்றி விடாதே!" என்றார்.

"அதை நான் மறக்கவில்லை. தங்களையும் தங்கள் சிநேகிதரையும் பார்த்தால் கானத்தைக் கேட்கக் கூடியவர்களாகத் தோன்றவில்லை. முள்ளின் மேல் நிற்பது போல் நிற்கிறீர்கள். ஆயினும் பாதகமில்லை. மணிமேகலை! எங்கே, யாழை எடுத்துக் கொண்டு வா!" என்றாள் நந்தினி.

"எதற்காக, அக்கா? விரும்பாதவர்களின் முன்னால் எதற்காக என்னை யாழ் வாசிக்கச் சொல்கிறீர்கள்?" என்று மணிமேகலை சிறிது கிராக்கி செய்தாள்.

"இல்லை, இல்லை! இளவரசர்தான் கேட்பதாகச் சொல்கிறாரே. அவருடைய நண்பருக்குப் பாட்டுப் பிடிக்காவிட்டால் காதைப் பொத்திக் கொள்ளட்டும்" என்றாள் நந்தினி!

"கடவுளே! அப்படியொன்றும் நான் இசைக்கலையின் விரோதி அல்ல! கோடிக்கரையில் பூங்குழலி என்னும் ஓடக்காரப் பெண்,

'அலைகடலும் ஓய்ந்திருக்க
அகக்கடல்தான் பொங்குவதேன்?',

என்று ஒரு பாட்டுப் பாடினாள். அதை நினைத்தால் இப்போதும் எனக்கு உடம்பு சிலிர்க்கிறது!" என்றான் வந்தியத்தேவன்.

"சில பேருக்குச் சிலருடைய பாட்டுத்தான் பிடிக்கும். என்னுடைய பாட்டு உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோ?" என்றாள் மணிமேகலை.

"பிடிக்காமற் போனால், யார் விடுகிறார்கள்? அதற்கு நான் ஆயிற்று. நீ யாழை எடுத்துக் கொண்டு வா!" என்றார் கரிகாலர்.

மணிமேகலை யாழை எடுத்துக்கொண்டு வந்தாள். பளிங்கு மண்டபத்தின் படிக்கட்டில் மேற்படியில் உட்கார்ந்து கொண்டாள்.

நரம்புகளை முறுக்கிச் சுருதி கூட்டினாள். ஏழு தந்திகள் கொண்ட யாழ் அது. ஒவ்வொரு தந்தியிலும் பாதி வரையில் ஒரு ஸ்வரமும் அதற்கு மேலே இன்னொரு ஸ்வரமும் பேசக் கூடியது.

சிறிது நேரம் யாழை மட்டும் வாசித்து இன்னிசையைப் பொழிந்தாள். கரிகாலரும் வந்தியத்தேவனும் உண்மையிலேயே மற்றக் கவலைகளையெல்லாம் மறந்து விட்டார்கள். யாழின் இசையில் உள்ளத்தைப் பறிகொடுத்துப் பரவசமானார்கள்.

பின்னர், மணிமேகலை யாழிசையுடன் குரலிசையையும் சேர்த்துப் பாடினாள். அப்பர், சம்பந்தர், சுந்தரரின் தெய்வீகமான பாசுரங்களைப் பாடினாள்.

சிறிது நேரமானதும் இளவரசர், "மணிமேகலை! உன்னுடைய கானம் அற்புதமாயிருக்கிறது. ஆனால் எல்லாம் பக்திமயமான பாடல்களையே பாடி வருகிறாய். அவ்வளவாக நான் பக்தியில் ஈடுபட்டவனல்ல. சிவ பக்தியையெல்லாம் மதுராந்தனுக்கே உரிமையாக்கிவிட்டேன். ஏதாவது காதல் பாட்டுப் பாடு!" என்று சொன்னார்.

மணிமேகலையின் அழகிய கன்னங்கள் நாணத்தினால் குழிந்தன. சிறிது தயக்கம் காட்டினாள்.

"பெண்ணே! ஏன் தயங்குகிறாய்? இங்கே நீ காதல் பாட்டுப் பாடினால் என்னை உத்தேசித்துப் பாடு கிறாய் என்று நான் எண்ணிக் கொள்ள மாட்டேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## யார் கொள்கை சிறந்தது?



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டில் சிறந்த அறிஞர்கள் இருவர் இருந்தனர்.

ஒருவர் கடவுள் நம்பிக்கை உடையவர். "இறைவனின் அருட்செயல்களைப் பேசிக் கொண்டும் பாடிக் கொண்டும் காலங் கழிப்பவர்".

இன்னொருவரோ கடவுள் நம்பிக்கை இல்லாதவர். "இறைவன் இருக்கிறான் என்பது பொய், எல்லாம் அவன் செயல் என்பது முட்டாள் தனம்" என்று எங்கும் பரப்பிக் கொண்டிருந்தார்.

இருவருக்குமே எண்ணற்ற சீடர்கள் இருந்தனர். ஒருவருடைய சீடர் இன்னொருவருடைய சீடரைப் பார்த்தால் போதும், வாய்ச் சண்டையோடு கூடச் சில சமயம் கைகலப்பும் நிகழும்.

கடவுள் நம்பிக்கையுடைய அறிஞர் தம் சீடர்களுடன் கடைத்தெரு வழியாக ஒருநாள் வந்து கொண்டு இருந்தார்.

அதே சமயம் எதிர்த் திசையிலிருந்து கடவுள் மறுப்பாளர் தம் சீடர்களுடன் வந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டனர். அவ்வளவு தான் இருவரும் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

கடவுள் நம்பிக்கையாளர் தம் பக்கத்திற்கு ஆதரவு சேர்க்கும் கருத்துக்களாகச் சொல்லிக் கொண்டு வந்தார். கடவுள் மறுப்பாளரும் பதிலுக்குப் பதில் கொடுத்துக் கொண்டிருந்தார். மக்கள் கூட்டம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தது.

நீண்ட நேரமாயிற்று, இருவராலும் ஒரு முடிவுக்கு வர முடியவில்லை.

"உமக்கு என்னால் அறிவூட்ட முடியாது. இந்தப் பக்தி நூல்களை எல்லாம் ஆழ்ந்து படியும். உமக்குப் பக்தி உணர்வு தோன்றும்" என்றார் கடவுள் நம்பிக்கையாளர்.

அதற்குக் கடவுள் மறுப்பாளர், "நீர் இந்தப் பகுத்தறிவு நூல்களைப் படியும். உம்மைப் பிடித்திருக்கும் கடவுள் என்ற மாயை ஓடிவிடும். உண்மை தோன்றும்" என்றார். இருவரும் அடுத்தவர் நூல்களை வாங்கிப் பிரிந்தனர். இரவு முழுமையும் அந்த நூல்களைப் படித்தனர்.

சில நாட்களுக்குள் கடவுள் மறுப்பாளர் கோயிலுக்குச் சென்று பக்தியுடன் இறைவனை வழிபட்டார். தாம் இதுவரை இருந்த நிலைக்கு வருந்தினார். அதேபோல் கடவுள் நம்பிக்கையாளரோ "கடவுள் இல்லை. முட்டாள்தனமாகக் கடவுள் இருக்கின்றார் என்று நம்பிக்கை கொண்டிருந்தேன்" என்று கடவுள் மறுப்பாளராகி விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் அன்புள்ளம் கொண்ட, இனிய மற்றும் ஒத்துழைப்பு கொடுப்பவர்களின் துணை விலை மதிப்பற்றது.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அப்பாவி பொதுமக்களின் உயிர்களை காப்பாற்றுங்கள்

மமதை தலைக்கேறிய தலைவர்களால் உலக நாடுகள் அமைதியை இழந்து தவிக்கின்றன.

ஆம், இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது நடத்திய பயங்கரத் தாக்குதலில் அந்நாட்டின் உச்ச தலைவர் அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார்.

தங்கள் தலைவர் கொல்லப்பட்டதால் பெருந்துயர் அடைந்த ஈரானிய மக்கள் பொது வெளியில் ஒன்று திரண்டு தங்களின் தாளாத துன்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இதேவேளை ஈரானும் பதில் தாக்குதல் நடத்தத் தலைப்பட்டுவிட்டது.

ஆக, அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரான் மீது தொடுத்த போரை நிறுத்துவது என்பது எப்படிச் சாத்தியமாகுமோ தெரியவில்லை.

தவிர, உலகைத் தங்களின் கைகளுக்குள் வைத்திருக்க நினைக்கின்ற வல்லாதிக்க நாடுகளின் குருதிப் பசிக்கு அப்பாவிப் பொதுமக்கள் பலியாகிப் போவதுதான் மிகப் பெரும் கொடுமை.

ஆம், நாடுகளுக்கிடையே மூண்டுள்ள கொடும் போரில் மிகப் பயங்கரமான ஆயுதங்களும் ஏவுகணைகளும் கொண்டு தாக்குதல் நடத்தும்போது மிக மோசமான மனித உயிரழிவுகள் ஏற்படவே செய்யும்.

இரண்டாம் உலகப் போரில் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்த வடுக்கள் இன்னமும் மனித குலத்தை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும்வேளையில், மூன்றாம் உலகப் போர் மூளுமாக இருந்தால் உலக மக்களில் கணிசமான தொகையினர் உயிரிழக்க வேண்டி வரும்.

இவ்வாறான அபாயம் ஏற்படக்கூடாது என்ற அடிப்படையிலேயே இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் உலக அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டது.

இருந்தும் வல்லரசுகளை மீறி எதுவும் செய்ய முடியாத கையறு நிலைக்கு ஐ.நா சபை வந்துவிட்டது.

உண்மையில் இஸ்ரேலின் தாக்குதல் காரணமாக காஸாவில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளும் பெண்களும் கொல்லப்பட்டபோது ஐ.நா சபை அமைதி காத்தது.

ஆக, ஐ.நா சபை என்பது வல்லரசுகளின் கட்டுப்பாட்டில் இருக்கின்றதே தவிர, மற்றும்படி அதனால் உலக நாடுகளுக்கிடையே ஏற்படுகின்ற யுத்தத்தை நிறுத்தவோ – தடுக்கவோ முடியாதென்பது நிறுதிட்டமாகத் தெரிகிறது.

ஆக, உலகில் போர் ஏற்பட்டால் ஐ.நா சபை தலையிட்டு அதனைத் தடுத்து நிறுத்தும் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்து அறுந்து விட்டன.

இங்குதான் யுத்தத்தில் ஈடுபடாத உலகின் பலமிக்க நாடுகள் ஒன்று சேர்ந்து, யுத்தத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கும் மேலாக, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாட்டு மக்கள்; யுத்தம் வேண்டாம். அருமந்த மனித உயிர்களைக் காவு கொள்ளாதீர்கள் என தத்தம் நாடுகளில் கிளர்ச்சி கொள்ள வேண்டும். அப்போதுதான் தற்போது ஏற்பட்டுள்ள யுத்தத்தை தணிக்க முடியும்.

எதுஎவ்வாறாயினும் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள நாடுகள் அப்பாவி மக்கள் மீதோ அவர்களின் குடியிருப்புகள் மற்றும் பொது இடங்களிலோ தாக்குதல் நடத்தாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

# யுத்தம் முடிந்து விட்டதற்காக அமைதி ஏற்பட்டதாக பொருள்படாது

## நோர்வே பாராளுமன்றில் எம்.பி கம்ஷாயினி உரை

(ஒஸ்லோ)

ஒரு நாட்டில் யுத்தம் முடிவுக்கு வருவதை அந்த நாட்டில் நிலவும் மோதல்கள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருத முடியாது என நோர்வே பாராளுமன்ற உறுப்பினர் கம்ஷாயினி குணரத்னம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமகால நிலைவரம் குறித்து நோர்வே பாராளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விசேட விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கம்ஷாயினி குணரத்னம் சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமையவே இந்த விவாதம் நடைபெற்றது.

அங்கு அவர் ஆற்றிய உரையில் தெரிவித்தாவது,

நான் 1988 ஆம் ஆண்டு இலங்கையில் யுத்தச் சூழலில் பிறந்தேன். நான் எனது தாயின் கருவறையில் இருந்தபோது, ஒவ்வொருமுறை விமானத் தாக்குதலுக்கான அபாய எச்சரிக்கை ஒலிக்கும் போது, எனது தாய் கோயில்களிலும் பாடசாலைகளிலும் தஞ்சம் புகுவார். நானும் எனது தம்பியும் இலங்கையிலேயே பிறந்தோம். ஆனால், வாழ்க்கை எங்களைப் பாதுகாப்பான நாடான நோர்வேக்கு அழைத்து வந்தது.

2009 ஆம் ஆண்டு இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. ஆனால் யுத்தம் முடிவடைவது என்பது மோதல்கள் அனைத்தும் தீர்ந்துவிட்டதாகப் பொருள்படாது.

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அண்மையில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழிகள், குறிப்பாக செம்மணியில் கண்டெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் கடந்த காலத்தின் கொடூரங்களை நினைவூட்டுகின்றன.

அங்கு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை பலரது எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. இது தற்செயலான நிகழ்வல்ல. மாறாக பல தசாப்தங்களாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கதைகளுடன் இது தொடர்புடையது.

இலங்கையில் 2024 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல்கள் சர்வதேச மட்டத்தில் ஒரு புதிய நம்பிக்கையைத் தோற்றுவித்தன.

குறிப்பாக புதிய அரசு ஊழலுக்கு எதிராக எடுத்த நிலைப்பாடு மற்றும் அரசியல் சீர்திருத்தம் குறித்த வாக்குறுதிகள் அந்த நம்பிக்கைக்குக் காரணமாக அமைந்தன.

இருப்பினும் அந்த வாக்குறுதிகள் உண்மையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகின்றது. தமிழர் வாழும் பகுதிகளில் இன்றும் இந்துக்கோயில்கள் இடிக்கப்படுவதாகவும் பௌத்த விகாரைகள் நிறுவப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் புதிய மனிதப் புதைகுழிகள் கண்டறியப்படுவதும் நிலங்கள் தொடர்ந்து இராணுவக் கட்டுப்பாட்டில் இருப்பதும் கவலையளிக்கின்றது எனத் தெரிவித்தார்.(ந-7)

## சூடுபிடிக்கும் ஈஸ்டர் விசாரணை

# பேராயர் திடீர் மௌனம் பெரமுன கடும் விசனம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தற்போது மௌனம் காப்பது ஏன் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கேள்வி எழுப்பியுள்ளது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி இது குறித்து ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது,

உயிர்த்த ஞாயிறு தாக்குதலை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தான் நடத்தியது என்பது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்க தற்போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முப்பது வருட காலப் போரை வெற்றிகரமாக முடிவுக்குக் கொண்டு வந்தத் தலைவரைக் கொண்ட எமது கட்சிக்கு, குண்டுகளை வைக்க வேண்டிய எந்தவொரு தேவையும் கிடையாது.

தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டறிந்து கைது செய்வோம் என்று தேசிய மக்கள் சக்தியினர் மேடைகளில் முழக்கமிட்டனர். தற்போதைய அரசு அந்த வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

எமது ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரி பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வீதியில் இறங்கிப் போராடினார். ஆனால் புதிய அரசு பதவியேற்ற பிறகு அவர் மௌனமாக இருக்கின்றார். பேராயர் மீண்டும் வீதிக்கு வந்து தாக்குதலின் பின்னணியில் உள்ள உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்குமாறு இந்த அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி விசாரணைகளைத் தீவிரப்படுத்தி உண்மைக் குற்றவாளிகளை அரசு வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

(ந-7)

## காஸ் சிலிண்டர் வெடிப்பு; இளம் யுவதி மரணம்

(கல்கமுவை)

சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்துச் சிதறியதில் சமையலில் ஈடுபட்டிருந்த இளம் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் குருநாகல், கல்கமுவை பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

22 வயதுடைய குறித்த யுவதி தனது வீட்டின் சமையல் அறையில் மதிய உணவைத் தயார் செய்துகொண்டிருந்தபோது, எதிர்பாராத விதமாக எரிவாயு சிலிண்டர் வெடித்துள்ளது.

இந்த வெடிப்புச் சம்பவத்தின் போது ஏற்பட்ட கடும் தீக்காயங்கள் காரணமாக அந்த யுவதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான விரிவான விசாரணைகளை கல்கமுவைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ந-7)

## அதிகாலை வேளைகளில் பனிமூட்டமான வானிலை

### சாரதிகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் அதிகாலை வேளைகளில் தற்போது பனிமூட்டமான வானிலை பரவலாகக் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 48 மணி நேரங்களுக்கு நாட்டில் வரண்ட காலநிலையே நிலவக்கூடும் எனவும் சில இடங்களில் மழை வீழ்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் உள்ளதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதிகாலை வேளைகளில் வீதிகளூடாக பயணிப்போர் மற்றும் சாரதிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுமாறும் அத்திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

(ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 35

என். சொக்கன்

இவர்களில் உளவாளிகள்தான் நிஜமாகவே எதிரி நாடுகளின் உள் வட்டாரங்களில் ஊடுருவி, தகவல்களைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருகிறவர்கள். இந்த உளவாளிகளைத் தேர்ந்தெடுத்து வேலைக்குச் சேர்க்கவேண்டியது அதிகாரிகளின் பொறுப்பு.

இந்த அதிகாரிகளை, 'Case Officers' என்று அழைப்பார்கள். பெரும்பாலும் வெளிநாடுகளில் இயங்கும் இவர்களுடைய பணி, மிக முக்கியமானது.

தொடக்கத்தில் OSSஇலும், பின்னர் சிஐஏவிலும் பணிபுரிந்த பெரும்பாலான பெண்கள், இந்த அதிகாரிப் பொறுப்பைதான் ஏற்றிருந்தார்கள். இவர்கள் மொழி, கலாசாரம், பண்பாடு என்று பலவிதங்களில் மாறுபட்ட புதிய சூழல்களில் இயங்க வேண்டியிருந்தது.

இந்த அதிகாரிகளின் முக்கியமான வேலை, சம்பந்தப்பட்ட வெளிநாட்டுக் குடிமக்களில் யாரெல்லாம அமெரிக்காவுக்கு ஆதரவாகச் செயற்படக் கூடியவர்கள் என்று கூர்ந்து கவனிப்பது. யாருக்குப் பணத்தேவை இருக்கும், யாரை எப்படித் தங்களுக்கு ஆதரவாகச் செயல்படத் தூண்டுவது என்றெல்லாம் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டியிருக்கும்.

இதற்காக, அவர்கள் சம்பந்தப்பட்ட (வருங்கால) உளவாளிகள்/ஒற்றர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணிப்பதும், அவர்களுடன் பேசிப் புரிந்துகொள்வதும் முக்கியம். சம்பந்தப்பட்ட நபர் நிஜமாகவே முக்கியமானவர்தானா, இரகசியத் தகவல்களையெல்லாம் அறிந்து வருகிற திறமை, தைரியம் அவருக்கு இருக்கிறதா அல்லது சும்மா வாய் ஜாலம் காட்டுகிறாரா என்று துல்லியமாக எடை போட்டு, அதன் பிறகுதான் அவர்களிடம் உளவுப் பொறுப்பை ஒப்படைக்க முடியும்.

இந்த குணங்கள் அனைத்தும், பெண்களுக்கு அதிகம். இயல்பாகவே ஜாக்கிரதை உணர்ச்சி மிகுந்த பெண்களுக்கு யாரை நம்பலாம், யாரை நம்பக்கூடாது, எந்தத் தகவல் எவ்வளவு தூரம் உண்மையானது என்றெல்லாம் ஓரளவு சரியாகவே முடிவெடுத்து விடமுடிகிறது.

இதனால்தான், இரண்டாம் உலகப் போர்க் காலகட்டத்தில், பல பெண் அதிகாரிகள் OSS ஊழியர்களாகச் சிறப்பாகச் செயற்பட்டிருக்கிறார்கள். பல அரசியல் காரணங்களால், அவர்களைப்பற்றிய விபரங்கள் பகிரங்கமாக வெளியிடப்படவில்லை.

OSS கலைக்கப்பட்டு, சிஐஏ உருவான பிறகும், அதில் பல பெண் அதிகாரிகளின் குறிப்பிடத்தக்க பங்களிப்பு இருந்தது. ஆனால், இப்போது போர் முடிந்துவிட்டதால், உளவுப் பணிகளில் சிறிது தாமதம் ஏற்பட்டுவிட்டது.

இதனால், பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் சிஐஏ பெண்கள்தான். உலகப் போர்க் காலத்தில் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட பெண் அதிகாரிகளைக்கூட, அமைதிக் காலத்தில் ஒதுக்கிவைக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய திறமை, சிஐஏவுக்குத் தேவையில்லை என்பதுபோல் நடந்து கொண்டார்கள்.




அதுமட்டுமில்லாமல், "உளவு பார்ப்பதெல்லாம் ஆண்களின் வேலை" என்கிற ஒரு பேச்சும் சிஐஏ வட்டாரங்களில் கிளம்பிவிட்டது. இதன் விளைவாக, அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு, சிஐஏவில் ஆண்களின் ஆதிக்கம்தான் அதிகமாக இருந்தது.

சிஐஏவின் வேலை, அமெரிக்காவில் அல்ல, மற்ற நாடுகளில்தான். இப்படி வெளிநாடுகளுக்குச் சென்று உளவு பார்ப்பதெல்லாம் மிகக் கடினமான வேலை. அதெல்லாம் பெண்களுக்குச் சரிப்படாது என்று அவர்களாக முடிவு கட்டிவிட்டார்கள்.

இதனால், அப்போது சிஐஏவில் பணிபுரிந்துகொண்டிருந்த பெண்கள் எல்லோருக்கும், சாதாரணமான அலுவலக வேலைகள் மட்டுமே ஒதுக்கப்பட்டன. மற்ற முக்கியப் பொறுப்புகள் அனைத்தையும் ஆண்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

மற்ற துறைகளைப்போலவே, இங்கேயும் பெண்கள் ஒடுக்கப்படுவதைக் கண்டித்துச் சிலர் கிளம்பினார்கள். பெரும்பாலும் இரகசியமாகவே இயங்கும் சிஐஏவில், இதுபோன்ற எதிர்ப்புக் குரல்கள் சுலபமாக அடக்கப்பட்டு விட்டன.

எனினும், சிஐஏ பெண்கள் நம்பிக்கை இழக்கவில்லை. உளவுப் பணிகளில் பெண்களாலும் சிறப்பாகப் பங்களிக்க முடியும், களத்தில் இறங்கி வேலை செய்யமுடியும் என்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

தொண்ணூறுகளின் தொடக்கத்தில்தான், இந்த நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மாறத் தொடங்கியது. இதற்குக் காரணமாக அமைந்த பல பெண் அதிகாரிகளில் முக்கியமான ஒருவர், ஜேன் வெர்டெஃப்யூல்.

சிஐஏவின் அடிமட்ட ஊழியர்களில் ஒருவராக இணைந்து, மிகப் பெரிய பதவிகள், பொறுப்புகளுக்கு உயர்ந்தவர் ஜேன். ஆனால், அவரது நடை, உடை, பாவனைகளில் அதற்கான அடையாளமே தெரியாது. அவரைப் பார்க்கிறவர்கள் யாரும், இந்தப் பெண் ஓர் உளவாளியாக இருக்கக்கூடும் என்று நினைக்கக்கூட மாட்டார்கள்.

இந்த அப்பாவித் தோற்றம், ஜேனுக்கு மிகவும் வசதியாக இருந்தது. யாருக்கும் சந்தேகம் எழாதபடி, தன்னுடைய முழு நேரத்தையும், சிஐஏவின் பணிகளுக்காகச் செலவிட்டுக் கொண்டிருந்தார். கடின உழைப்பாளி, பொறுமையும் நிதானமும் கூடுதல் பலங்கள்.

1986ஆம் ஆண்டு, அவரிடம் ஒரு முக்கியமான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது - மாஸ்கோவில் இருக்கும் சிஐஏ உளவாளிகள், ஒற்றர்கள் பலர், தொடர்ந்து காணாமல் போய்க் கொண்டிருக்கிறார்கள். இதன் அர்த்தம், சிஐஏவின் இரகசியங்களை, யாரோ சோவியத் யூனியனுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது யார் என்று கண்டுபிடிக்க வேண்டும்.

அமெரிக்கா-சோவியத் யூனியன் இரண்டுபட்டதில், நடுவில் இருந்த ஒற்றர்களுக்குதான் கொண்டாட்டம். இங்கே நடப்பதை அங்கே சொல்வது, அங்கே நடப்பதை இங்கே சொல்வது என்று பலர், இரண்டு பக்கமும் சம்பாதித்துக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், இந்த விவகாரம். மிகப் பெரியது. இது யாரோ சாதாரண ஒற்றன் செய்யும் திருட்டு வேலையாகத் தெரியவில்லை. பரம இரகசியமாகக் காப்பாற்றப்பட்ட விடயங்களெல்லாம், சோவியத்துக்குச் சுலபமாகக் கிடைத்திருக்கிறது.

அப்படியானால், "திருடன் உள்ளே தான் இருக்கிறான்" என்றார் ஜேன். சிஐஏ இதனை ஏற்றுக்கொள்ளத் தயங்கியது அல்லது பயந்தது.

ஆகவே, இந்த விசாரணைக்காக அவருக்கு ஒரு சிறிய குழுவைதான் கொடுத்தார்கள். அதில், ஜேன் உட்பட மூன்று பெண்கள்.

ஜேன் தலைமையில் செயற்படத் தொடங்கிய இந்தக் குழு, சோவியத் யூனியனுக்கு என்னென்ன தகவல்கள் கசிந்திருக்கிறது என்று ஒரு பட்டியல் போட்டார்கள். அந்த இரகசியத் தகவல்கள் சிஐஏவில் யாருக்கெல்லாம் தெரியும் என்று இன்னொரு பட்டியல் தயாரித்தார்கள். இதை அடிப்படையாக வைத்துக்கொண்டு தங்களுடைய விசாரணைகளை ஆரம்பித்தார்கள்.

வைக்கோல் போரில் ஊசியைத் தேடுவது போல்தான். ஆனாலும், ஜேன் சலித்துக்கொள்ளவில்லை. தன்னுடைய குழுவினரைத் தொடர்ந்து உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார். எங்காவது ஒரு துப்புக் கிடைத்துவிடாதா என்று கோப்புகளிலும் கம்ப்யூட்டரிலும் தேடல் தொடர்ந்தது.

இப்படிக் கிட்டத்தட்ட இரண்டரை வருடம் போராடிய பிறகு, அவர்களுக்கு ஒரு துப்புக் கிடைத்தது-அல்ட்ரிச் ஆம்ஸ் என்ற சிஐஏ அதிகாரி, தன்னுடைய வருமானத்தை மீறிச் செலவழிக்கிறார் என்கிற தகவல் சிக்கியது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதம நீதியரசர்...

பிரதம நீதியரசர் பிரிதி பத்மன் சூரசேன வடக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ளார்.

தனது வடக்குக்கான விஜயத்தின் ஓர் அங்கமாக அவர் நேற்று (01) ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி, பருத்தித்துறை, மல்லாகம் மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களுக்கு விஜயம் மேற்கொண்டார்.

அதன் பிரகாரம் சாவகச்சேரி நீதிமன்றுக்கு விஜயம் செய்த பிரதம நீதியரசர் குழாத்தினரை சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதிகள், பதிவாளர்கள், உத்தியோகஸ்தர்கள் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர்.

பிரதம நீதியரசரின் குறித்த விஜயத்தில் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஆனந்தராசா, கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதி அந்தோனிப்பிள்ளை யூட்சன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதேவேளை பிரதம நீதியரசர் குழாத்தினர் நேற்று முன்தினம் வவுனியா, கிளிநொச்சி நீதிமன்றங்களுக்கும் விஜயம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,30)

## மீனவர்...

ஈடுபட்டிருந்த நிலையில் கடலில் தவறி விழுந்த இளம் குடும்பஸ்தர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பருத்தித்துறை கொட்டடியைச் சேர்ந்த விஜயகுமார் நிக்சன் (வயது-23) என்ற ஒரு குழந்தையின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த மீனவர் கடந்த வெள்ளிக்கிழமை (27) இரவு கடலுக்குச் சென்ற வேளை படகின் இயந்திரத்தில் தூண்டில் கயிறு சிக்கியுள்ளது. அதனைச் சீர்செய்ய முற்பட்டபோதே அவர் கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளார்.

இது குறித்து அவருடன் சென்ற சக தொழிலாளி தகவல் வழங்கியதைத் தொடர்ந்து பருத்தித்துறை கொட்டடிப் பகுதி மீனவர்கள் சுமார் 25க்கு மேற்பட்ட படகுகளில் தேடுதல் நடத்திய நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (01) காலை 10 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இம் மரணம் தொடர்பில் பருத்தித்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன்தயான் விசாரணைகளை மேற்கொண்டார். (ந-7,60)

## எரிபொருள்...

எரிபொருளைப் பதுக்கி வைக்கும் நபர்களைக் கண்டறியும் பணிகளில் பாதுகாப்புத் தரப்பினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதற்காக நாடு தழுவிய ரீதியில் விசேட புலனாய்வுத் தகவல்கள் திரட்டப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பதுக்கல் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் அல்லது அதற்குத் துணைபோகும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஈரானின்...

ஈரானிய அரசியலமைப்பின் 111 ஆவது பிரிவின் படி, உச்ச தலைவர் காலமானால் புதியவரைத் தேர்ந்தெடுக்கும் வரை தற்காலிகத் தலைமை உருவாக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில், உயர்மட்ட மதகுருமார்களின் ஆலோசனையின் பின் அராஃபி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுடனான போர்ச் சூழல் தீவிரமடைந்துள்ள நிலையில், நாட்டின் நிர்வாகம் மற்றும் இராணுவக் கட்டமைப்பைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்ல இந்த நியமனம் மிக முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது.

"நிபுணர்கள் பேரவை" கூடி நிரந்தரத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் வரை, ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் உள்ளடங்கிய தற்காலிக சபையுடன் இணைந்து அராஃபி நாட்டின் அதிமுக்கிய தீர்மானங்களை எடுப்பார் என ஈரானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ந-7)

## பயங்கரவாதத்...

அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத் தொடர் கடந்த திங்கட்கிழமை (23) ஆரம்பமாகி, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஏற்கெனவே கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரின் போது இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தீர்மானத்தை மேலும் இரு வருட காலத்துக்கு நீடிப்புச் செய்து நடைமுறைப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதன்பிரகாரம் இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைவரம் தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர்மாதம் நடைபெறவிருக்கும் 63 ஆவது கூட்டத் தொடரிலும் விரிவான அறிக்கை அடுத்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 64 ஆவது கூட்டத் தொடரிலும் சமர்ப்பிக்கப்படும்.

இந்நிலையில் கூட்டத்தொடரில் கடந்த புதன்கிழமை (25) நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் இலங்கை சார்பில் உரையாற்றிய ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி சுமித் தஸநாயக்க, இன்னமும் தீர்வு காணப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் உள்ளகக் கட்டமைப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருப்பதுடன், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை ஸ்தாபிப்பது குறித்து ஆராயப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த வெள்ளிக்கிழமை (27) உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கினால் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான அறிக்கை, பேரவையில் முன்வைக்கப்பட்டது.

அவ்வறிக்கையில் இலங்கை குறித்து பிரஸ்தாபித்த உயர்ஸ்தானிகர், பயங்கரவாதத்தடைச் சட்டத்தை முற்றாக நீக்குமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துவதுடன் புதிதாக உருவாக்கப்படும் சட்டம் மனித உரிமைச் சட்டத்துக்கு ஏற்புடையவாறு அமைவதை உறுதிப்படுத்துவதற்கு சிவில் சமூகத்துடன் இணைந்து பணியாற்றுமாறும் வலியுறுத்துகிறேன் எனத் தெரிவித்தார்.

அத்தோடு கடந்த ஆண்டு மனித உரிமைகளை மேம்படுத்துவதை முன்னிறுத்தி இலங்கை, பங்களாதேஷ், கொலம்பியா, சிலி உள்ளடங்கலாக 35க்கும் மேற்பட்ட நாடுகளின் அரசாங்கங்களுடன் தனது அலுவலகம் பணியாற்றியதாகவும் அவர் குறிப்பிட்டார். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2026.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 6120
K 8 1 9 3 0 8
அத சம்பத
K 9 3 0 8
சீட்டிழுப்பு இலக்கம் 0695
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 0236
துலாம் 12 13 19
1351

தன நிதானய
திகதி - 2026.03.01
சீட்டிழுப்பு இலக்கம் - 2150
Q 13 56 70 77 Q
2969

மெகா பவர்
திகதி 01/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2468
T 16 02 14 44 78

ஜய
திகதி 2026.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 0388
M 4 6 2 7
ஞாயிறு போனஸ் இலக்கம் 1447

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4362
சீட்டிழுப்பு திகதி 01.03.2026
V 09 10 35 69
V
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.01
சீட்டிழுப்பு இலக்கம் 1429
கன்னி 21 26 36 60 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.03.2026 வெற்றி வாரம் 0828
ஆங்கில எழுத்து T
4 9 7 8 2 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,586,960.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3094
சீட்டிழுப்பு திகதி 2026.03.01
தினம் ஞாயிற்றுக்கிழமை
25 39 55 73 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.102,997,993.60
DLB

சனிதா
திகதி 01.03.2026 வெற்றி வாரம் 5255
17 49 75 80 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,133,190.40
DLB

சசிரி
வெற்றி வாரம் 924
சீட்டிழுப்பு திகதி 01.03.2026
ஞாயிற்றுக்கிழமை
33 38 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,650,280.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4806
சீட்டிழுப்பு திகதி 01.03.2026
தினம் ஞாயிற்றுக்கிழமை
07 34 50 56 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,023,273.60
DLB

கப்றுக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 31 04 09 58 65
2270
01.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.168,974,670.00
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் 2920
சீட்டிழுப்பு திகதி 2026.03.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.95,634,934.40
31 59 61 63 O
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விற்பனைக்கு**

MIBG 4 அரச சான்றிதழ் பெற்ற விதை உழுந்து செடி வர்த்தகம் விற்பனைக்கு.

(6945)

021 205 4809
077 529 2951

**இலங்கையில் இருந்து கனடாவிற்கு**

கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப

10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg

DELIVERY ▸ 2-3 Months

எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, புதுக்குடியிருப்பு, கோப்பாய், யாழ்ப்பாணம் (Metro Branch), பருத்தித்துறை, வவுனியா, முல்லைத்தீவு, சுன்னாகம், சங்கானை, வல்வெட்டித்துறை, கொழும்பு, மன்னார், கொடிகாமம், மானிப்பாய், புத்தூர், மட்டக்களப்பு, கிளிநொச்சி, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு, நெல்லியடி

(C-5096)

V2 TRAVELS
076 822 6244
076 455 0672

# தூணுடன் மோதிய மோட்டார் சைக்கிள்

## ஒருவர் உயிரிழப்பு

வவுனியாவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா - பூனாவைப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இவ்விபத்து சம்பவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது பிரஸ்தாப நபர், குறித்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணிக்கையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியின் அருகில் இருந்த தூணுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த இளைஞனை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும் அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ந-7)

**DCM** யாழ்.நகர்

A/L 2028

வேம்படி மகளிர் கல்லூரி அருகாமை

கலை, வர்த்தகப் புதிய பிரிவு

ஆரம்பம்: 07.03.2026
காலை 8.00 மணி (சனி)

நிர்வாகம் : 077 778 9815

(C-5095)

**தமிழ் மொழி மூலம் / English Medium**

A/L 2028 கணக்கீடு

KBK ACCOUNTING

MR.BALAKAJEN SLTS
RESOURCE PERSON
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons),Acc.spl

ஆரம்பம்
02.03.2026 திங்கள் 03.00 Pm

| Tamil Medium | English Medium |
|---|---|
| 03.00 - 04.00 Pm | 03.00 - 04.00 Pm |

புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2026, 2027
மாணவர்களுக்கு தேவையான புதிய தேர்ச்சியுடன்

(C-5091)

KBK
கந்தர்மடம் 077 452 0043

**தவறிவிட்டது**

பேராசிரியர் பசுபதி சிவநாதன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வங்கி அட்டைகள் அடங்கிய பேர்ஸ் திருநெல்வேலிப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 077 936 1568 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். அல்லது வலம்புரிப் பத்திரிகை அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

**வைத்தியம்**

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastritis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669

(6958)

**CME கல்வி நிலையம்**

ஐயனார் வீதி, பருத்தித்துறை

A/L 2028

கணிதம், உயிரியல், கலைப் பிரிவு வகுப்புக்கள் (வழமையான ஆசிரியர்கள்)

ஆரம்பம் :
08.03.2026
ஞாயிறு காலை 9.30 மணி

தொடர்புகளுக்கு:
077 778 1371

(C-5092)

**கடைக்கட்டடம் வாடகைக்கு**

டச்சு வீதி, சாவகச்சேரியில் 16x42 பரப்பளவுடைய கட்டடம் வாடகைக்கு உண்டு. களஞ்சியம், வியாபார நிலையம் என்பவற்றுக்கு உகந்தது.

தொடர்புகளுக்கு:
077 288 7740

(C-5097)

**Tharany SUPERMARKET**

யாழ் நகரிற்கு வந்து செல்லும்போது மலிவு விலையில் அத்தியாவசிய பொருட்களை வாங்கி சென்றிடுங்கள்... 02.03.2026 முதல் 08.03.2026 வரை

| | | | |
|---|---|---|---|
| Rs. 2399.00<br>ஆட்டக்காரி சிவப்பு நாடு 10Kg | RS. 189.00 Max 5Kg<br>White Sugar 1Kg | RS.1089.00 Max 2 PCS<br>Anchor 400g | ~~RS.1770~~ RS.949<br>Gold Winner Sunflower Oil 1L |
| BUY 2 GET 1 FREE<br>RUCHI SALT 400G | RS.279.00<br>Nice and Clean Baby Wipes 80 PCS | BUY 2 GET 1 FREE (LAVENDAR)<br>SUNLIGHT SOAP LEMON 110G | ~~RS.1300~~ RS.1199<br>V.S.P GINGELLY OIL 750 ML |
| RS.799.00<br>Marvel 16 PCS | BUY 2 GET 1 FREE<br>STAR GOLD NOODLES 400G | BUY 1 GET 1 FREE<br>GLIM DISH WASH 500ML | ~~RS.450.00~~ RS.379.00<br>Maliban Chocolate Cream 400g |

VACANCY AVAILABLE
இச் சலுகை கையிருப்பு உள்ளவரை மட்டுமே
No.758, KKS Road, Jaffna
077 1997 206

(2106)

# மரண அறிவித்தல்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 12 - 07 - 1949 | | 01 - 03 - 2026 |



## ஸ்ரீமதியம்மா முத்துலிங்கம்

சுதுமலை கிழக்கு சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஸ்ரீமதியம்மா முத்துலிங்கம் அவர்கள் நேற்று (01.03.2026) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி - லஷ்மிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற முத்துலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும் ஸ்ரீதரன் அவர்களின் அன்புச் சகோதரியும் லோகதாசன் (ஜேர்மனி), மோகனதாஸ் (கனடா), மதிவதனி (சுவிஸ்), குகநாதன் (பிரான்ஸ்), ரகுநாதன், ஜெகநாதன் (பிரான்ஸ்), சுதர்சினி, கஜானி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சுதர்சினி, மதிவதனி, ஞானதாஸ், பிரதீபா, அபிரா, கம்ஷா, ஜெகன், சிவரங்கன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஓவியா, விதுசன், அதிசயா, ஆகாஸ், அபினாஸ், அனோஸ், கிருசன், அனுசன், ஜானுஜா, தன்சிகா, ஆசிகா, மதுர்னா, அகரன், அக்ஷன், அகிரா, அகதன், சயங்கன், சனுஜன், கஜிவ், ஆருஷ், ஆர்ணா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2026) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
சுதுமலை கிழக்கு,
சுதுமலை.
கஜானி காலணியகம் (மானிப்பாய்)
077 607 1141

(6957)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2026இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org